விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 | மலர் : 01 | 29.04.2021 வியாழக்கிழமை | இதழ் : 149 | பக்கங்கள் : 16






# நாடு தழுவிய முடக்க நிலை நடைமுறைப்படுத்தப்படாது

## பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உத்தரவாதம்

கொழும்பு, ஏப் 29

சமீப வாரங்களாக இலங்கையில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துவருகின்ற போதும் நாடுதழுவிய முடக்கநிலையை நடைமுறைப்படுத்தாதிருக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாடுதழுவிய முடக்கநிலையை நடைமுறைப்

15

# இரு நாட்டு உறவுகள் மேலும் பலமடையும்

## ஜனாதிபதியுடனான சந்திப்பை அடுத்து சீனப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்ரல் 29

**சீனா - இலங்கை நாடுகளுக்கு இடையிலான உறவுகள் எனது விஜயத்தின் மூலமும், ஜனாதிபதி கோட்டாபயவுடன் இடம்பெற்ற சந்திப்பு மூலமும் மேலும் பலமடைந்துள்ளன என்று இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள சீன பாதுகாப்பு அமைச்சர் வே பங்கெற் (Wei Fenghe) தெரிவித்துள்ளார்.**

15



# பாடசாலைகள் மீளத் திறத்தல் ஞாயிறன்று தீர்மானிக்கப்படும்

கொழும்பு, ஏப். 29

கொரோனா அச்சம் காரணமாக மூடப்பட்டுள்ள பாடசாலைகளை மீண்டும் திறப்பது குறித்து எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை தீர்மானிக்கப்படும் என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல் பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

15

# யாழ்ப்பாணத்தில் மேலும் 12 பேருக்கு கொரோனா

யாழ்ப்பாணம், ஏப்.29

யாழ்ப்பாணத்தில் 12 பேருக்கும், வவுனியாவில் ஒருவருக்கும் என வடக்கு மாகாணத்தில் மேலும் 13 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று நேற்றுப் புதன் கிழமை உறுதி செய்யப்பட்டது என மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடங்களில் 660 பேரின் மாதிரிகள் நேற்றுப் பரிசோதனைக்கு

15

# 1,451 பேருக்கு தொற்று

கொழும்பு,ஏப்.29

இலங்கையில் மேலும் 1,451 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது என சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

இலங்கையில் ஒரேநாளில் இந்தளவு அதிகமான தொற்றாளர்கள் இனங்காணப்பட்டிருப்பது இதுவே முதல் முறை

15

# அரச வங்கிகளின் 47 கிளைகள் மூடப்பட்டன!

கொழும்பு, ஏப் 29

நாடு முழுவதும் உள்ள இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி ஆகியவற்றின் 47 கிளைகள் நேற்று அதிரடியாக மூடப்பட்டன. கொரோனா தொற்றையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

நாடு முழுவதிலுமுள்ள இலங்கை வங்கியின் 23

15

# விமான நிலையங்களை மூட எந்தத் தீர்மானமும் இல்லை

## அமைச்சர் பிரசன்ன தெரிவிப்பு



கம்பஹா, ஏப்.29

புதிய கொரோனா தொற்று வகைகள் கண்டறியப்பட்ட போதிலும், இலங்கையின் விமான நிலையங்களை மூட அரசாங்கம் எந்தத் தீர்மானமும் எடுக்கவில்லை என சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

15

# கொரோனாவால் மேலும் 6 உயிரிழப்புக்கள் பதிவு

## 660 ஐ தாண்டியது எண்ணிக்கை

கொழும்பு, ஏப்.29

கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் ஆறு உயிரிழப்புக்கள் உறுதி செய்யப்பட்ட நிலையில், இலங்கையில் கொரோனாவால் ஏற்பட்ட மொத்த உயிரிழப்புக்களின் எண்ணிக்கை 661 ஆக உயர்வடைந்தது என சுகாதார அமைச்சு தெரி

15

## அத்தியவசியப் பொருட்களை வாங்கி வையுங்கள்



# மேலும் சில பகுதிகள் முடக்கப்படலாம்!

## இராணுவத் தளபதி எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 29

பொதுமக்களை அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்து வைத்திருக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ள இராணுவத் தளபதி சவேந்திர சில்வா அதிகளவு நோயாளர்

15

## நிலைமாறிய வைரஸிலிருந்து

# சிறுவர்களை பாதுகாக்க அனைவரும் அதிக அவதானம் செலுத்த வேண்டும்

கொழும்பு, ஏப்.29

நாட்டில் தற்போது இனங்காணப்பட்டுள்ள நிலைமாறிய வைரஸ் சிறுவர்களை அதிகளவில் பாதிப்பதாக எந்தத் தரவுகளும் பதிவாகவில்லை. எவ்வாறிருப்பினும் இதன் தாக்கத்திலிருந்து சிறுவர்களைப் பாதுகாப்பதிலும் அனைவரும் அதிக அவதானம்

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## நாடுதழுவிய...

படுத்தாதிருப்பதற்கு அத்தகைய முடக்க நிலைகள் பொருளாதாரத்தின் மீதும் சமூகத்தின் மீதும் செலுத்தும் தாக்கங்களே காரணம் என அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

இலங்கைக்கு இரண்டு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு நேற்று முன்தினம் வருகைதந்த சீனப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் வே பங்கெற்றுடன் நேற்று பிற்பகல் இடம்பெற்ற பேச்சின் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

"கொரோனாவிற்கு பிந்திய பொருளாதார மீட்பு நடவடிக்கை விடயத்தில் இன்னமும் பல விடயங்கள் மேற்கொள்ளப்படவேண்டியுள்ளன என்பது குறித்து நீங்களும் உடன்படுவீர்கள் என நம்புகின்றேன். உலகெங்கிலுமிருந்து முதலீடுகளை ஈர்த்துக்கொள்வதே எமது முன்னுரிமைக்குரிய விடயங்களாக காணப்படுகின்றன. இலங்கையில் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை மீளக்கட்டியெழுப்புவதற்கு உங்களின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றேன்" எனப் பிரதமர் சீனப் பாதுகாப்பு அமைச்சருடனான கலந்துரையாடலின் போது தெரிவித்தார்.

கொரோனா பெருந்தொற்றுநோய்க்கு மத்தியிலும் உயர் மட்ட சீன அதிகாரி இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டமையை பிரதமர் வெகுவாகப் பாராட்டினார். நேற்றுக் காலை சீனப் பாதுகாப்பு அமைச்சர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

## இரு நாட்டு...

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று சந்தித்தபோது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஜனாதிபதி அலுவலகத்துக்கு வருகை தந்த சீன பாதுகாப்பு அமைச்சரை ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி.ஜயசுந்தர மற்றும் வெளிவிவகார செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம் பகே ஆகியோர் வரவேற்றனர்.

ஜனாதிபதிக்கும் தனக்குமிடையிலான இரு தரப்பு பேச்சு மிகவும் பயனுள்ளதாக அமைந்திருந்ததாக சீன பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தார்.

அதேபோன்று, இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகள் எனது விஜயத்தின் மூலமும், ஜனாதிபதி கோட்டாபயவுடன் இடம்பெற்ற சந்திப்பு மூலமும் பலமடைந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

சீன பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் வெய் பிங், தனது வருகையை நினைவு கூரும் வகையில் விஷேட விருந்தினருக்கான நினைவுப் புத்தகத்தில் கைச்சாத்திட்டார்.

இலங்கைக்கான சீன தூதுவர் கீ சென் ஹொங், சீன மக்கள் இராணுவத்தின் ஒன்றிணைந்த பணிக்குழாம் திணைக்களத்தின் தலைவரும், சர்வதேச விவகாரங்களுக்கான பணிப்பாளர் நாயகம் ஷாஓ யென் மின்ங், மேஜர் ஜெனரல் சீ கோவை உள்ளிட்ட சிரேஷ்ட பிரதிநிதிகள் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (எ)

## மேலும் சில...

கள் கண்டுபிடிக்கப்படும் பகுதிகள் முடக்கப்படலாம் எனத் தெரிவித்துள்ளார்.

பல நாட்களிற்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்து வைத்துக்கொண்டு தயாராகயிருப்பது சிறந்தது எனத் தெரிவித்துள்ள இராணுவத் தளபதி, எனினும் எதிர்வரும் நாட்களில் கண்டுபிடிக்கப்படவுள்ள நோயாளிகளின் எண்ணிக்கையே இதனைத் தீர்மானிக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

நாங்கள் மக்களை மிரட்டவேண்டிய அவசியமோ அல்லது உண்மையை மறைக்க வேண்டிய தேவையோ இல்லை எனத் தெரிவித்துள்ள அவர், கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்தால் சிகிச்சை நிலையங்களை அதிகரிக்க இராணுவம் தயாராகவுள்ளதாக தெரிவித்துள்ளார்

மருத்துவமனைகளிற்கு தேவைப்பட்டால் மேலும் ஆயிரம் கட்டில்களை வழங்க தயாராகவுள்ளோம் என சுகாதார துறையினருக்கு தெரிவித்துள்ளோம், நாங்கள் என்ன சவால்களை எதிர்கொண்டாலும் நாங்கள் தோற்கும் தேசமில்லை ஒரு தேசமாக நாங்கள் மீண்டெழுவோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் நோயாளிகளிற்கு தேவையான ஒக்சிசன் நிலவரம் குறித்து 12 மணித்தியாலங்களிற்கு ஒரு முறை சுகாதார சேவைகள் பணிப்பாளரை நான் தொடர்புகொள்கின்றேன் ஒட்சிசன் விநியோக நிறுவனங்கள் ஒட்சிசன் போதுமான அளவு இருப்பதாகதெரிவிக்கின்றன எனவும் சவேந்திரசில்வா தெரிவித்துள்ளார்.

## கொரோனாவால்...

வித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் நேற்றைய தினம் 988 புதிய கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில், இலங்கையில் பதிவான மொத்த கொரோனா நோயாளர்களது எண்ணிக்கை ஒரு இலட்சத்து நான்காயிரத்தையும் கடந்தது.

இந்நிலையில், நேற்று கொரோனா தொற்றுக்குள்ளான 227 நோயாளர்கள் பூரண குணமடைந்து வைத்தியசாலைகளை விட்டு வெளியேறிய நிலையில், குணமடைந்தவர்களில் மொத்த தொகையும் 95 ஆயிரத்து 83 ஆக உயர்வடைந்தது.

தற்சமயம் நாடு முழுவதும் உள்ள வைத்தியசாலை மற்றும் சிகிச்சை நிலையங்களில் 8,737 கொரோனா நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அதேநேரம் கொரோனா தொற்று சந்தேகத்தில் 1,041 பேர் வைத்தியக் கண்காணிப்பில் உள்ளனர். (எ)

## பாடசாலைகள்...

இதன்படி, நாடு முழுவதிலும் உள்ள பாடசாலைகள் எதிர்வரும் 30ஆம் திகதி வரை மூடப்பட்டுள்ள நிலையில், எதிர்வரும் 02ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இது தொடர்பில் இறுதிமுடிவு எடுக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

இலங்கையில் கடந்த சில தினங்களாக வேகமாகப் பரவி வருகின்ற கொரோனா வைரஸ் காரணமாக நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்துப் பாடசாலைகள், முன்பள்ளிகள் மற்றும் அறநெறிப் பாடசாலைகள் அனைத்துக்கும் எதிர்வரும் 30ஆம் திகதி வரை விடுமுறை வழங்குவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மே 10 ஆம் திகதி முதல் பல்கலைக்கழகக் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியும் என்றும் கல்வி அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

## யாழ்ப்பாணத்தில்...

உட்படுத்தப்பட்டன. இதன்போதே, 13 பேருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டது.

இதில், சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் மூவருக்கும், யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் இருவருக்கும், கரவெட்டி, வேலணை மற்றும் கோப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் தலா ஒருவருக்கும் என சுயதனிமைப்படுத்தலில் இருந்த 8 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை நோயாளர் விடுதியில் சிகிச்சை பெற்ற ஒருவருக்கும், வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற வந்த ஒருவருக்கும் என இரண்டு பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் சிறைச்சாலைக் கைதிகள் இருவருக்கு தொற்று கண்டறியப்பட்டது.

வவுனியா செட்டிக்குளம் பிரதேச வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்ற ஒருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது என்றும் மருத்துவர் கேதீஸ்வரன் தெரிவித்தார். (எ-03)

# கொரோனா மீண்டும் உச்சமடைய அரசின் அசமந்தமே முழுக்காரணம்

## ஜே.வி.பி. எம்.பி. விஜித ஹேரத் குற்றச்சாட்டு



கொழும்பு, ஏப். 29

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று விவகாரத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு சரியான கவனம் செலுத்தத் தவறியதால் மீண்டும் தொற்று அதிகரித்துள்ளது என மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) குற்றஞ்சாட்டியுள்ளது.

பி.சி.ஆர். பரிசோதனைகளை அரசு குறைத்திருந்தது எனவும், இதன் விளைவாக அடையாளம் காணப்படும் கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை வீழ்ச்சியைக் காட்டியிருந்தது எனவும் அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் சுட்டிக்காட்டினார்.

சமீபத்திய பி.சி.ஆர். பரிசோதனை மூலம், கிராமப்புறங்கள் உட்பட நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் கணிசமான எண்ணிக்கையிலான நோயாளிகள் அடையாளம் காணப்படுகின்றனர் எனவும் அவர் கூறினார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அவர், கொரோனா வைரஸ் தொடர்பான இறப்புகளும் அதிகரித்து வருவதால் ஆபத்தான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது எனவும் எச்சரிக்கை விடுத்தார்.

கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை குறைந்துவிட்டன என அரசு கூறியதாலேயே பொதுமக்களும் கொரோனா குறித்த அச்சத்தைத் தணித்து, நிதானமாகப் பயணிக்கத் தொடங்கினர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், நாட்டில் தற்போது நிலவும் நெருக்கடியான சூழ்நிலையை இலகுவாக எடுத்துக்கொள்ள முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மே 10 பல்கலைக்கழுங்களை மீண்டும் திறக்க நடவடிக்கை

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.29

நாட்டிலுள்ள அனைத்து அரச பல்கலைக்கழங்களையும் எதிர்வரும் மே 10 ஆம் திகதியன்று மீண்டும் திறக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தவிர்க்க முடியாத சூழ்நிலைகள் காரணமாக பல்கலைக்கழகங்களை மூடுவதால் மாணவர்களுக்கு ஏற்படும் பாதகங்களைக் குறைக்க விரிவுரைகள் மற்றும் வகுப்புக்கள் இணையத்தளமூடாக தொடரும்.

2020ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர் தரப்பரீட்சை முடிவுகள் அடிப்படையில் மாணவர்கள் செப்ரெம்பர் மாதத்தில் பல்கலைக்கங்களுக்கு அனுமதிக்கப்படுவார்கள் என்றும் அவர் கூறினார்.

முன்னதாக ஏப்ரல் 27 ஆம் திகதி முதல் பல்கலைக்கழகங்களை மீண்டும் திறக்கத் திட்டமிடப்பட்டது. எனினும், நாட்டில் தற்போது நிலவும் கொரோனா மூன்றாவது அலை அச்சுறுத்தலால் பல்கலைக்கழங்களை குறித்த தனத்தில் திறக்க முடியாது போனது என்றும் அவர் குறிப்பிட்டார்.

# ஊடகத்துறையில் 36 பேருக்கு கொரோனா

கொழும்பு, ஏப். 29

கொழும்பிலிருந்து செயற்படும் ஊடகத்துறையைச் சார்ந்த குறைந்தபட்சம் 36 பேருக்கு நேற்றைய தினம் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்தை (ஐ.ரி.என்) சேர்ந்த 20 பேருக்கு கொரோனா உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

இதனைவிட, கொழும்பிலிருந்து வெளிவரும் பிரபல சிங்களத் தினசரியான மௌபிமவின் பிரதம ஆசிரியர், உதவி ஆசிரியர்கள் உட்பட 14 பணியாளர்களுக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சிரச தொலைக்காட்சி நிறுவனத்தைச் சேர்ந்த இரண்டு பேருக்கும் கொரோனா நேற்றைய தினம் உறுதிப்படுத்தப்பட்டது.

## 1,451 பேருக்கு...

யாகும்.

இதனையடுத்து நாடளாவிய ரீதியில் அடையாளம் காணப்பட்ட மொத்த நோயாளிகளின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 4,938 ஆக உயர்ந்தது.

இவர்களில் 95 ஆயிரத்து 83 பேர் குணமடைந்த நிலையில் 8 ஆயிரத்து 737 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவருகின்றனர். (எ)

## அரச வங்கிகளின்...

கிளைகள் நேற்று பகல் அதிரடியாக மூடப்பட்டுள்ளன. வங்கியின் ஊழியர்கள் பலருக்கும் கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டதையடுத்தே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

புத்தாண்டு விடுமுறையைத் தொடர்ந்து இலங்கை வங்கியின் தலைமையகத்தில் 50 பேர் உட்பட 70 க்கும் அதிகமானவர்களுக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது.

இதனைவிட மக்கள் வங்கியின் 17 கிளைகளும், தேசிய சேமிப்பு வங்கியின் ஏழு கிளைகளும் மூடப்பட்டுள்ளன.

## விமான...

தெரிவித்துள்ளார்.

எனினும் புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தரும்போது பாதுகாப்பு செயல்முறைகள் பின்பற்றப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கம்பஹாவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

புதிய கொரோனா தொற்று வகைகள் நாட்டில் அடையாளம் காணப்பட்ட போதிலும், அனைத்து சவால்களையும் எதிர்கொள்ள அரசாங்கம் தயாராகி வருகிறது.

சுகாதார அதிகாரிகளுடன் கலந்துரையாடி இது தொடர்பான மேலதிக முடிவுகள் எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார். (எ)

## இப்படியும் நடக்கிறது...!

கடவுள் மறுப்புப் பிரசாரம் செய்துவந்த பெரியாருக்கு அப்போது வயது 70இற்குமேல் இருக்கும். அவருடைய நாக்கில் சிறிய காயம் ஏற்பட்டுவிட்டது.

டாக்டர் முத்துசாமி பெரியாருடைய நண்பர். பெரியாரின் நாக்கில் ஏதோ மருநதைத் தடவி வந்தார். நோய் குணமாகவில்லை.

பிறகு டாக்டர் முத்துசாமி பெரியாரை சென்னைக்கு அனுப்பினார். டாக்டர் சுந்தரவதனத்தைப் பார்க்கும்படி ஆலோசனை கூறினார்.

பரிசோதித்துப் பார்த்த டாக்டர் சுந்தரவதனம், “ஐயா, மன்னிக்கணும். இப்படி விஷயம் தெரிந்த தாங்களே இத்தனை காலம் சும்மா இருக்கலாமா?”, என்று கேட்டார்.

பெரியார் திடுக்கிட்டு என்ன? என்றார்.

தங்களுக்கு நாக்கில் புற்றுநோய் வந்திருக்கிறது என்றார் டாக்டர்.

பெரியாரின் முகத்தில் கவலை சூழ்ந்தது.

இதனைக் கவனித்த டாக்டர், ‘ஐயா, தாங்கள் கவலைப்படுவதுபோல் தெரிகிறது”, என்றார்.

உடனே பெரியார், “நான் கவலைப்பட்டது நாக்கில் புற்றுநோய் வந்து சாகப்போகின்றேன் என்றல்ல. இந்தப் பாவி கடவுளைத் திட்டினான். அதனால், நாக்கில் புற்றுநோய் வந்து செத்தான் என்று மதவாதிகள் அவதூறு பரப்புவார்கள். அதனால், எனக்குப் பின்பு எவனும் கடவுள் எதிர்ப்புப் பிரசாரத்திற்குத் துணிந்து வரமாட்டானே என்ற கவலைதான்”, என்று கூறினார்.

பயங்கர நோய் வந்த நிலையிலும் தன்னை குறித்துக் கவலைப்படாமல் தன் இயக்கம் குறித்து கவலைப்பட்ட பெரியாரின் பண்பட்ட எண்ணத்தைப் பார்த்து டாக்டர் வியந்துபோனார்.

“நாம் சில்லறை சலுகைகளுக்கு அடிபணியாமல் இலக்கை நோக்கிப் பயணிப்பதன் ஊடாக மாத்திரமே வெற்றியடைய முடியும்”, என்று தந்தை செல்வா நினைவு தின வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐயா தெரிவித்திருக்கிறார்.

அவரது இந்தச் செய்தியைப் பார்த்ததும், அதனை முழுமையாக படிக்க மனது தூண்டியது.

அனைத்து இன, மத பேதமின்றி சகலவிதமான சலுகைகளும் வழங்கப்படவேண்டும் என்ற எண்ணத்திலேயே தந்தை செல்வா 1949ம் ஆண்டு தமிழ் அரசுக் கட்சியை தொடங்கினார் என்றும், தாங்களும் அவரின் கொள்கைகளுக்காக எழுபது வருடங்களாகப் பயணித்து வருகின்றனர் எனவும், அதிகளவான கட்சிகள் அவரின் நிலைப்பாட்டையே ஏற்றுக் கொண்டுள்ளன என்றும் சம்பந்தன் தெரிவித்திருக்கிறார்.

தமிழ் மக்களுக்கு எப்போதுமே மறதி அதிகம். அதனால்தான் நமது அரசியல்வாதிகள் தாம் நினைத்தவாறு பேசவும் தாம் நினைத்தவாறு நடந்துகொள்ளவும் முடிகின்றது.

தாம் எதைச் செய்தாலும் தமிழ் மக்கள் கண்டுகொள்ளப்போதில்லை என்பதற்கு அப்பால், அடுத்து வருகின்ற பரபரப்புச் செய்தி ஒன்று அவர்களை பழையதை மறக்கப் பண்ணிவிடும் என்ற நம்பிக்கையிலேயே அவர்களும் இவ்வாறு நடந்துகொள்கின்றார்கள் போலும்.

தந்தை செல்வா, 1949இல் தமிழ் அரசுக் கட்சியை ஆரம்பித்தபோதே ஆங்கிலத்தில் அதற்கு சமஷ்டிக் கட்சி என்றும் தமிழில் தமிழ் அரசு கட்சி என்றும் பெயர் வைத்திருந்தார்.

அதாவது, வடக்கு மாகாண சபை தேர்தலில் கூட்டமைப்பு வென்றதும் தமிழர் அரசு மலர்ந்தது என்று நம்மவர்கள் மகிழ்ச்சி தெரிவித்தது போல, சமஷ்டிக் கோரிக்கைக்காக போராடியபோதிலும் அது தமிழர்களைப் பொறுத்தவரை தமிழ் அரசுதான்.

சுமார் இருபது வருடங்களாக தந்தை செல்வா சமஷ்டியை வென்றெடுக்க பல்வேறு அறப்போராட்டங்களை நடத்தினார். மாறிமாறி வரும் அரசுகளுடன் ஒப்பந்தங்களைச் செய்து பார்த்தார்.

கடைசியில், இனி தமிழ் மக்களை காப்பாற்ற வேண்டும் எனில் தனிநாடு ஒன்றுதான் தீர்வு என்ற முடிவுக்கு வந்தார். தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கினார்.

வட்டுக்கோட்டையில் தனிநாடு கோரிய தீர்மானத்தை எடுத்த பின்னர் அவர் மறைந்தாலும் அவரின் கட்சியினர் அடுத்து வந்த தேர்தலில் தமிழ் மக்களிடம் ஆணை கேட்டு தேர்தலை சந்தித்தனர்.

இது எல்லாம் உங்கள் எல்லோருக்கும் தெரிந்த சங்கதிதான்.

ஆனால், தந்தை செல்வாவின் கொள்கைக்காக தமது கட்சி தொடர்ந்து பயணித்து வருவதாக சம்பந்தன் ஐயா கூறுவது எந்தக் கொள்கை?

தந்தை செல்வா தொடக்கிவைத்த கொள்கையையா? அல்லது, அது சாத்தியமல்ல, பிரிந்து செல்வதுதான் இனி ஒரே வழி என்ற அவரின் தனிநாட்டுக் கொள்கையையா என்பதை சம்பந்தன் முதலில் தெளிவுபடுத்தவேண்டும்?

கொள்கை என்பதும் அதன் மேலான பிடிப்பு என்பதும் ஒரு தலைவருக்கு எப்படி இருக்கவேண்டும் என்பதைக் குறிக்கவே மேலே பெரியாரின் கதையை எழுதியிருந்தேன்.

சம்பந்தனின் கொள்கை என்ன என்பது தெரிந்தால்தானே மக்களும் அதன்பின்னால் இன்னும் இன்னும் அணிதிரளலாம்.

**- ஊர்க்குருவி.**

# இந்தியாவில் கொரோனாவின் தாக்கம் வேதனையளிக்கிறது!

## தமிழ் அரசு கட்சி தலைவர் மாவை சேனாதிராசா



**யாழ்ப்பாணம், ஏப்.29**

**தொற்றிலிருந்து இலங்கையை பாதுகாக்க உதவிய இந்தியாவின் தற்போதைய நிலை வேதனையளிக்கிறது. அங்கு நிலைமை விரைவில் கட்டுப்பாட்டுக்குள் வர வேண்டும் என்று பிரார்த்திக்கின்றோம் என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதி ராசா தெரிவித்துள்ளார்.**

அவர் நேற்று அனுப்பி வைத்த ஊடக அறிக்கையிலேயே இதனை கூறினார். மேலும், “இலங்கையில் சென்ற ஜனவரி முதல் கொரோனா வைரஸ் தொற்று நோய் தீவிரமடைந்து வந்தபோது இந்திய அரசு, பிரதமர் மோடியின் உத்தரவின்படி ஐந்து இலட்சம் ஒக்ஸ்போட் அஸ்ட்ராசெனகா தடுப்பூசிகளை இலங்கைக்கு வழங்கியது. இப்பேருதவியினால் இலங்கையில் கொரோனா வைரஸ் ஓரளவு கட்டுப்பட்டது. நான் கூட இந்தத் தடுப்பூசியை போட்டுள்ளேன்.

இதனால் பெருமளவில் நோயாளர்கள் நன்மையடைந்தனர் என ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக மருத்துவபீடம் பல ஆய்வுகளின் பின் அறிவித்துள்ளது. இன்னும் பல இலட்சம் தடுப்பூசிகளை இந்தியா இலங்கைக்கு வழங்கவுள்ளது. இலங்கையில் தற்போது மூன்றாவது அலை பரவுகின்றது.

ஆனால், இந்திய நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் தீவிரம் அண்மைய நாட்களில் நாளொன்றுக்கு (323,000) மூன்று அரை இலட்சத்தை அண்மித்தளவுக்கு பரவி வருகின்றது. நாளொன்றுக்கு மரணங்களும் 2,771 ஆக உயர்ந்து வருகின்றமை மிகப் பெரும் பாதகமான நெஞ்சை உலுக்குகின்ற செய்தியாகவிருக்கின்றது. இதனை உலக சுகாதார அமைப்பின் தலைவர் ‘டெட்ரோஸ் அதனோம் கெப்ரேயஸ்’ குறிப்பிடுகின்றார். இந்நிலமை குறிப்பாக மகாராஷ்டிராவிலும், நம் முறவுகள் வாழும் தமிழ்நாட்டிலும் பெருகிப் பரவுகின்றமையும் பெரும் கவலையளிக்கின்றது.

அதனைவிட இந்திய நாட்டில் மருத்துவ ஒட்சிசன் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளமையாலும் மரணங்களும் ஏற்படுவது பெரும் பாதகம். ஒட்டுமொத்தமாக இந்திய நாட்டில் 17.6 மில்லியன் தொற்று ஏற்பட்டுள்ள நிலையில் 197,894 மரணங்களும் ஏற்பட்டுள்ளமையை அறிய முடிகின்றது.

உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் தொற்று தீவிரமடைந்து வருகின்றது. இரண்டாவது அலை ஏற்பட்ட நிலையில் பிரித்தானியாவுக்கு அடுத்தபடியாக விருந்த தொற்று இப்போது இந்தியாவில் கூடி வருகின்றமைதான் பாரதூரமானது.

இந்திய நாட்டில் அண்மையில் நடைபெற்ற தேர்தல் காலங்களிலும் இந்துக் கோவில் விழாக்களிலும் பெருந்திரளான மக்கள் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றாமல் பெருமளவில் திரண்ட நிகழ்வுகள் தான் இத்தனைதூரம் கொரோனா வைரஸின் தீவிரத்திற்கு காரணமென்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இவற்றை இலங்கை மக்களும் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

உலகப் பொருளாதாரம் மட்டுமல்ல இந்தியாவிலும், இலங்கையிலும் பொருளாதார நெருக்கடி பாராதூரமான நிலைமைகளை அடையப் போகின்றது. இதனால் போரால் பாதிக்கபட்ட வடக்கு, கிழக்கு மக்களும் மிகமோசமான பொருளாதாரப் பாதிப்புக்களையும் எதிர்நோக்க வேண்டி ஏற்படப் போகின்றது. இலங்கை நாட்டுக்கு முதலிலும் தொடர்ந்தும் மக்களை இந்நோயிலிருந்து பாதுகாத்த இந்திய நாட்டிலேயே கொரோனா நோய் பெருமளவில் பரவி வருகின்றமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவேண்டுமென நாமும் பிரார்த்திக் கின்றோம். ஏற்பட்ட மரணங்களுக்காகவும் எம் அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம். (ஐ)

# வடக்கின் சுற்றுலா வரைபடங்களில் தமிழினத்தின் வரலாறு திரிபுபடுத்தல்!

## சுட்டிக்காட்டி ஆளுநருக்கு சீ.வீ.கே. கடிதம்!

யாழ்ப்பாணம், ஏப். 29

வடக்கு மாகாண சுற்றுலா வரைபடங்களில் தமிழ் இனத்தின் வரலாறு, கலாசாரம், சமயம் சார்ந்த விடயங்கள் திரிபுபடுத்தப் பட்டுள்ளன எனக் கூறப்படுகின்றது. வடக்கு மண்ணினதும், மக்களினதும் வரலாற்று விடயங்களை பாதுகாக்க வேண்டிய வட மாகாண சபை நிர்வாகம் அவற்றை திரிபுபடுத்துவதற்கு ஒருபோதும் பங்காளியாக இருக்க முடியாது.

இவ்வாறு குறிப்பிட்டு, வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் வடக்கு மாகாண ஆளுநருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அதில், வடக்கு மாகாண சுற்றுலா வரைபடங்களில் தவறுகள் தொடர்பில் சங்கானை - மதவடியை சேர்ந்த க. தீபன் என்பவர் முறைப்பாடு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். அதில், வடக்கு மாவட்டங்களை சாராத பல இடங்களும் மதத் தலங்களும் வடக்கு மாகாண மாவட்டங்களுடன் உள்ளடக்கப்பட்டு பல திரிபுபடுத்தல்கள் இடம்பெற்றுள்ளன என்று கூறப்பட்டுள்ளது. குறிப்பாக, அயல் மாவட்டங்களில் உள்ள பௌத்த விகாரைகள் வட மாகாணத்து மாவட்டங்களுடன் இணைத்து பதிவிடுவது மிகவும் பாரதூரமானது. இந்த முறைப்பாடுகளின் உண்மை தன்மைகள் துரிதமாகவும் சுயாதீனமாகவும் ஆய்வுக்கு உட்படுத்துவது அவசியமாகிறது என்று கருதப்படுகின்றது.

முறைப்பாட்டில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள தவறுகள் ஏதாவது சரியெனக் காணப்படின் அவற்றைத் திருத்துவதற்கான துரித நடவடிக்கை எடுத்தல் கட்டாயமாகிறது - என்றுள்ளது. (ஐ)

கல்வி TV CHANNEL-1

**காலை**

5.15 மணி - தரம் 06 தமிழ்
6.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
6.45 மணி - தரம் 08 கணிதம்
7.30 மணி - தரம் 09 வரலாறு
8.15 மணி - தரம் 10 விஞ்ஞானம்
9.00 மணி - க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) தமிழ்
10.00 மணி - பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி - க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப்பிரிவு) கணிதம்
12.00 மணி - தரம் 06 தமிழ்

**பகல்**

1.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
2.00 மணி - தரம் 08 கணிதம்
3.00 மணி - க.பொ.த சாதாரண தரம் விவசாயம்
3.40 மணி - க.பொ.த சாதாரண தரம் கத்தோலிக்கம்
4.20 மணி - க.பொ.த சாதாரண தரம் ஆங்கிலம்
5.00 மணி - க.பொ.த சாதாரண தரம் கணிதம்
5.40 மணி - க.பொ.த சாதாரண தரம் தகவல் தொழில்நுட்பம்
6.20 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள்
7.00 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள்

ஈழநாடு
Eelanadu
29.04.2021 வியாழக்கிழமை
சார்வரி, சித்திரை 16

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**e-mail: editor@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

# சஜித் பிரேமதாசவின் நகர்வுகள்

எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஐரோப்பிய நாடுகளின் தூதுவர்களை சந்தித்து, கலந்துரையாடியிருக்கின்றார். அரசாங்கம், மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக விழுமியங்களை புறக்கணித்து செயற்படுவதாகவும், அடக்குமுறை ஆட்சியொன்றை முன்னெடுக்க முயற்சிப்பதாகவும் – அத்துடன், அரசாங்கத்திற்கு சவாலாக விளங்கும் பாராளுமன்ற உறுப்பினர்களின் பிரஜாவுரிமையை பறிப்பதற்கு அரசாங்கம் முயற்சித்துவருவதாகவும், சஜித் பிரேமதாஸ மேற்குலக இராஜதந்திரிகளிடம் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

கடந்த பாராளுமன்ற தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி மோசமான வீழ்ச்சியை சந்தித்ததன் பின்னர், மேற்குலகு சார்பான இலங்கையின் அரசியல், ஒப்பீட்டடிப்படையில் வீழ்ச்சியடைந்தது. இலங்கையின் வெளிவிவகார அணுகுமுறையை பொறுத்தவரையில், பாரம்பரிய கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுமே வெளிவிவகாரக் கொள்கையை தீர்மானித்தன. ஐக்கிய தேசியக் கட்சி மேற்குலகு சார்பான கட்சியாகவும், சிறிலங்கா சுதந்திரக் கட்சி அணி சாரா அணுகுமுறையின் அடிப்படையிலுமே தமது வெளிவிவகாரக் கொள்கையை திட்டமிட்டன. ஆனால், கடந்த பாராளுமன்ற தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி முற்றிலுமாக வீழ்ச்சியடைந்ததை தொடர்ந்து, ஒப்பீட்டடிப்படையில், மேற்குலகு சார்பான பாரம்பரிய அரசியல் இலங்கையில் வீழ்சியை சந்தித்தது.

இன்றைய நிலையில், மேற்குலகு சார்பான பலமானதொரு கட்சி இலங்கையில் இல்லை. ஆளும் பொதுஜன பெரமுன சார்பிலான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நடுநிலைமையான வெளிவிவகாரக் கொள்கை தொடர்பில் பேசினாலும்கூட, அதன் நடைமுறை ரீதியான பயன்பாடானது, தற்போது கேள்விக்குள்ளாகிவருகின்றது. சீனாவின் பிடியிலிருந்து வெளியேற முடியாத நிலையில், பொதுஜன பெரமுனவினால், நடுநிலையான வெளிவிவகாரக் கொள்கையை முன்னெடுக்க முடியுமா – என்பது சந்தேகமே. மேலும், சீனாவை ஒரு வரையறைக்குள் முடக்கும் அமெரிக்க மூலோபாயத்திற்கு முன்னால், நடுநிலை வெளிவிவகாரக் கொள்கையை அரசாங்கத்தினால் எந்தளவிற்கு வினைத்திறனுடன் முன்னெடுக்க முடியுமென்பதும் பிறிதொரு கேள்வியாகும்.

இவ்வாறானதொரு சூழலில்தான், அண்மைக் காலமாக சஜித் பிரேமதாஸ மேற்குலகை நோக்கி சில முன்னெடுப்புக்களை மேற்கொண்டுவருகின்றார். அண்மையில் ஐக்கிய தேசியக் கட்சி பாரம்பரியத்தின் மூத்த தலைவர்களில் ஒருவரான – ரொனி டி.மெல்லை சந்தித்ததையும் இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் நோக்கவேண்டும். ரணில் விக்கிரமசிங்கவின் வீழ்ச்சியை தொடர்ந்து, மேற்குலகு சார்பான அரசியலில் ஏற்பட்டிருக்கும் இடைவெளியை நிரப்புவதற்கு சஜித் முயற்சிப்பதாகவே தெரிகின்றது. இதன் தொடர்ச்சியாகவே, தற்போது அவர் மேற்குலக இராஜதந்திரிகளை சந்தித்து, அரசாங்கம் அடக்குமுறை வழியில் பயணிப்பதாக முறையிட்டிருக்கின்றார்.

சஜித் பிரேமதாஸ நீண்டகாலமாக அரசியலில் இருந்தாலும்கூட, பிராந்திய மற்றும் சர்வதேச தொடர்புகளில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஒருவராக அடையாளம் காணப்படவில்லை. அதற்கும் மேல் – அவ்வாறான தொடர்புகளை பிரேமதாஸ வளர்த்துக் கொள்ளவும் இல்லை. அல்லது, ரணிலினால் அதற்கான வாய்ப்புக்கள் அவருக்கு கிடைக்காமலும் இருந்திருக்கலாம். இந்த பின்புலத்தில்தான், தற்போது எதிர்கட்சித் தலைவராக இருக்கின்ற இந்த சந்தர்ப்பத்தை அடிப்படையாகக் கொண்டு, தனது சர்வதேச தொடர்புகளை வளர்த்துக்கொள்ள சஜித் முயற்சிக்கக் கூடும். சஜித்தின் அண்மைக்கால நகர்வுகள் இதனை தெளிவாகவே வெளிப்படுத்துகின்றது.

# இறைவன் மானிடர்களுக்கு ஆறறிவை வழங்கியது பகுத்தறிந்து வாழ்வதற்கே!

- அலசுவது **இராஜதந்திரி** -

இந்தியாவில் கொவிட் மரணங்கள் இரண்டு லட்சத்தையும் தாண்டியுள்ள நிலையில் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ள புதுடில்லி, மகாராஷ்டிரா மாநிலங்களில் கொவிட் நோயாளிகளின் எண்ணிக்கை அசுர வேகத்தில் அதிகரித்துச்செல்வதை அவதானிக்க முடிகின்றது. புதுடில்லி, மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் வைத்தியசாலைகளில் மட்டுமல்ல. சுடுகாடுகளிலும் கொவிட் வியாதியால் மரணித்தவர்களின் சடலங்களை எரிக்கவோ அல்லது புதைக்கவோ முடியாத வகையில் இடநெருக்கடி நிலவுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தினந்தோறும் கொவிட் நோயினால் பீடிக்கப்படுவோரின் எண்ணிக்கை மூவாயிரத்துக்கும் அதிகமானதாக காணப்படுகின்றது.

இந்தியாவில் கும்பமேளா பண்டிகை உட்பட வேறு பண்டிகைகளும், சில மாநிலங்களில் மாநில சட்டசபைத் தேர்தல்களும் ஏராளமானோரை கவர்ந்து வருவதன் காரணமாகவும் புதுடில்லி, மகாராஷ்டிரா போன்ற மாநிலங்கள் சன நெருக்கடியான பிரதேசங்களாக காணப்படுவதாலும் கொவிட் வியாதி அசுர வேகத்தில் பரவிவருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதீத ஆன்மீக ஈடுபாடு மற்றும் சட்டம் ஒழுங்கு ஆகியவற்றுக்கு மதிப்பளிக்காத போக்கு ஆகியவையே இந்தியாவில் கொவிட் வியாதி வேகமாகப் பரவுவதற்கான முக்கியமான காரணமாகக் கூறப்பட்டுள்ளது.

**நாச்சிமார் கோயில் சம்பவம்**

இதேவேளை, யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் தற்சமயம் கொவிட் வியாதி அதிகரித்து வரும் சூழலில் யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை நாச்சிமார் கோயில் தேர் உற்சவத்தின்போது நூற்றுக்கணக்கான அடியார்கள் திரண்டதையடுத்து அக்கோயிலின் தலைவர், செயலாளர் ஆகியோர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தனர். கொவிட் வியாதி தடுப்பு சம்பந்தமாக உள்ள விதிமுறைகள் பின்பற்றப்படாமை சம்பந்தமாகவே நாச்சிமார் கோவில் நிர்வாகத்தினர் கைதாகியுள்ளனர். ஆலய திருவிழாக்களில் 50 பேர் மட்டுமே பங்குபற்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளபோதிலும், அனுமதிக்கப்பட்ட தொகைக்கு மேலதிகமாக கோவில் ஆலயங்களில் பக்தர்கள் கூடிவருவதை அவதானிக்க முடிகின்றது.

**யாழ். குடாநாட்டில் திருவிழாக்காலம்**

யாழ். குடாநாட்டைப்பொறுத்தவரை தற்போது திருவிழாக்காலம் ஆரம்பித்துள்ளது. யாழ். குடாநாட்டின் மூலைமுடுக்குகளிலுள்ள ஆலயங்கள் பலவற்றிலும் வருடாந்த மகோற்சவங்கள் நாட்கணக்கில் தினந்தோறும் தற்போது இடம்பெற்று வருகின்றன. தற்பொது ஆரம்பித்துள்ள கோவில்களின் திருவிழாக்காலம் எதிர்வரும் ஆவணி மாதம் ஆரம்பமாகும் நல்லூர் திருவிழாக் காலத்தோடு நிறைவுக்கு வரும்.

யாழ்ப்பாண குடாநாட்டவரைப் பொறுத்தவரை தென்னிலங்கையரைப்போல



வீண் கேளிக்கைகள், களியாட்ட விழாக்களில் தமது பொழுதுகளைக் கழிக்கும் வழக்கம் கொண்டவர்களல்லர். ஆன்மீக விழாக்கள் மற்றும் தமது கலை, கலாசார விழுமியங்களுடன்கூடிய நிகழ்ச்சிகளிலேயே அவர்கள் பெரிதும் ஈடுபாடு கொண்டவர்களாக காணப்படுகின்றனர். இருந்தபோதிலும், கடந்த காலங்களில் போலன்றி, தற்போது கொவிட் வியாதி அசுரத்தனமானதாக முழு மனித குலத்துக்கும் உலகளாவிய ரீதியில் அச்சுறுத்தலை விடுத்துள்ள நிலையில், நம்மைநாமே பாதுகாத்துக்கொள்ள வேண்டிய நிலைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம்.

**இறைவன் வழங்கிய பகுத்தறிவு**


கொவிட் தவிர்ப்பு வழிகாட்டல்களை பின்பற்றிய நிலையில் ஆலய விழாக்கள், பொது வைபவங்கள் என பொறுப்பற்ற வகையில் பங்குபற்றிவருவது பேராபத்துக்கு வழிதேடுவதாகவே இருக்கின்றது.

ஆன்மீக விழாக்களைப்பொறுத்தவரை இறைபக்தி மூலம் எதனையும் சாதிக்கலாம். வருகின்ற துன்பமெல்லாம் இறையருளால் நீங்கிவிடும் என்று கருதி கண்மூடித்தனமாக நடந்துகொள்வோரே காணப்படுகின்றனர்.

ஆனால், மனிதனைப்படைத்த இறைவன் ஏனைய உயிரினங்களுக்குப்போலல்லாது ஆறறிவை மனிதர்களுக்கு தந்துள்ளார். இந்த ஆறறிவு என்பது பகுத்தறிவாகும். எது சரி, எது தவறு என்று பகுத்தறிந்து நடக்கும் வல்லமையை இறைவன் கொடுத்த நிலையில், அதனை சரிவர உணராத காரணத்தினால் மனிதர்கள் இடர்களுக்குள்ளாகின்றனர். இவ்வகையில், அனைத்தையும் அறிந்த இறைவனுக்கு முன்பாகவே அவன் வழங்கிய பகுத்தறிவையும் புறந்தள்ளும்போது 'இறைவனே தனது அடியவர்களை காப்பதற்கு ஏதோ ஒரு வடிவில் செயலில் இறங்கியுள்ளதையே வண்ணை நாச்சிமார் கோயிலில் உற்சவத்தில் பொலிஸார் தலையிட்ட விடயம் விளங்குகின்றது.' எனவே, கொவிட் என்ற கொடிய அசுர வியாதியை இறைவனால் வழங்கப்பட்ட பகுத்தறிவின்மூலம் இல்லாதொழிப்பதையே மனிதர்கள் மனதில் நிறுத்த வேண்டியவர்களாகின்றனர்.

●

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
பேச்சிலும் பணியிலும் கவனமாக இருந்துவிட்டால் போதும். பிள்ளைகள் நல்ல வழியில் வாழ்வை அமைத்துக்கொள்வார்கள். பிள்ளைகளின் திருமணத்தை விமர்சையாக நடத்த திட்டமிடுவீர்கள்.

**இடபம்**
பணியிடப் பிரச்னைகளுக்கு மாறுபட்ட முறையில் தீர்வு காண்பீர்கள். மகனுக்கு அதிக சம்பளத்துடன் கூடிய புதிய வேலை கிடைக்கும். தடைப்பட்ட விஷயங்கள் இன்று நல்ல விதத்தில் முடியும்.

**மிதுனம்**
குடும்பத்தில் ஒருவருக்கு வாழ்க்கை துணை அமையும். வாகனத்தை சீர் செய்வீர்கள். சேமிப்பில் ஆர்வம் கொள்வீர்கள். தோல்வி மனப்பான்மையிலிருந்து விடுபடுவீர்கள். பணவரவு கூடும்.

**கடகம்**
சிறிய செலவுகள் இருக்கும். புதிய நட்பு கிடைக்கும். இத்தனை நாள் குடும்பத்தில் நிலவி வந்த குழப்பங்கள் விலகும். மனப் போராட்டங்கள் குறையும். புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள்.

**சிம்மம்**
எதிர்த்தவர்கள் அடங்குவார்கள். உங்கள் பேச்சில் முதிர்ச்சி தெரியும். முடிக்கப்படாமல் இருந்த பத்திர பதிவு பற்றி நல்ல செய்தி வரும். உடன்பிறந்தவர்களால் நன்மைகள் உண்டு. நட்பு வட்டம் விரியும்.

**கன்னி**
அதிக வட்டிக்கு வாங்கியிருந்த கடனை விரைந்து அடைப்பீர்கள். தள்ளிப் போன வழக்குகள் சாதகமாகும். மனஸ்தாபம் நீங்கும். இழுபறியாக இருந்த விஷயங்கள் எல்லாம் முடிவடையும்.

**துலாம்**
தாயாருக்கு முதுகு, மூட்டு வலி ஏற்பட வாய்ப்பு உள்ளது. வாகனத்தில் செல்லும் போது கவனமாகச் செல்லுங்கள். தாயார், அத்தையால் பல நன்மைகள் கிடைக்கும் நாள்.

**விருட்சிகம்**
சொத்து வாங்கும் போது சான்றிதழ்களைச் சரி பார்த்து வாங்குங்கள். சோர்ந்திருந்த நீங்கள் சுறுசுறுப்பாவீர்கள். மனம் அமைதியுறும். வெளி நாடு சம்பந்தப்பட்ட புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள்.

**தனுசு**
எதிர்பார்த்த பணம் வந்து நிலைமையைச் சமாளிப்பீர்கள். வீட்டில் அமைதி திரும்பும். பயம் நீங்கும். முகம் மலரும். நோய் பற்றிய கற்பனையிலிருந்து மீளுவீர்கள். தோற்ற பொலிவு கூடும்.

**மகரம்**
உடல் நலம் சீராகும். பிள்ளைகள் நல்ல வழிக்கு திரும்புவார்கள். வாழ்க்கைத்துணையின் பிடிவாதம் தளர்வதால் நிம்மதி வரும். காணாமல் போன முக்கியப் பொருள் ஒன்று கிடைக்கும்.

**கும்பம்**
தீய நண்பர்களிடம் இருந்து ஒதுங்குவீர்கள். தன்னம்பிக்கை கூடும். எதிர்மறை எண்ணங்களை மனதைவிட்டு விரட்டுவது நல்லது. முன்கோபத்தை குறையுங்கள். நட்பை பலப்படுத்திக் கொள்வீர்கள்.

**மீனம்**
பிறரிடம் கனிவாகப் பேசுவீர்கள். ஆபரணம் சேரும். பணம் வரும். பழுதாகி கிடந்த வாகனத்தை மாற்றி புதிய வாகனம் வாங்குவீர்கள். பிறரது பாராட்டுக்கு மயங்க வேண்டாம். பணியில் கவனம் தேவை.

# ஒன்றரை கோடி கொவிட் தடுப்பூசிகள் கொள்முதல்

## தமிழக அரசு உத்தரவு

சென்னை, ஏப். 29

முதல் கட்டமாக 1.50 கோடி கொவிட் தடுப்பூசிகளைக் கொள்முதல் செய்ய தமிழக அரசு அரசாணை பிறப்பித்து உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்ட அறிவிப்பு:

“இந்தியாவிலேயே அனைவருக்கும் கொரோனா தடுப்பூசி இலவசமாக வழங்கப்படும் என ஏற்கெனவே அறிவித்த முதல் மாநிலம் தமிழ்நாடு. கொரோனா நோய்த் தொற்றுப் பரவல் அதிகரித்து வரும் நிலையில், அதனைக் கட்டுப்படுத்த தடுப்பூசி போடும் பணிகள் தமிழ்நாடு அரசால் தீவிரப்படுத்தப்பட்டு வருகின்றன.

தற்போது 45 வயதுக்கு மேற்பட்ட நபர்களுக்குச் செலுத்தப்பட்டு வரும் இலவச தடுப்பூசிப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இதுவரை (27.04.2021), 55.51 லட்சம் நபர்களுக்குத் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

மேலும், வரும் மே முதலாம் திகதி முதல் 18 வயதுக்கு மேல் 44 வயது வரை உள்ளவர்களுக்கு ஏற்கெனவே, அறிவித்தவாறு, இலவசமாகத் தடுப்பூசி போட்டுக்கொள்ள தமிழ்நாடு முதல்வரின் உத்தரவின்பேரில் தேவையான முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கென, முதற்கட்டமாக 1.50 கோடி தடுப்பூசிகள் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் மூலமாக கொள்முதல் செய்து வழங்குவதற்கு தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது”-இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழகத்தின் தேவைக்கு ஏற்றவாறு ஒட்சிசனை பகிர்ந்தளிக்க வேண்டும்

## மு.க.ஸ்டாலின் கோரிக்கை



சென்னை, ஏப். 29

ஸ்டெர்லைட் ஆலையில் உற்பத்தி செய்யப்படும் ஒட்சிசனை தமிழகத்தின் தேவைக்கு ஏற்ப பகிர்ந்தளிக்கும் பொறுப்பை பிரதமர் நரேந்திர மோடி மேற்கொள்ள வேண்டும் என தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே மேற்படி தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ள அவர், ‘சென்னை உட்பட தமிழகத்தின் பல பகுதிகளிலும், கொரோனா பரவல் அதிகரித்துள்ளது. ஒட்சிசன் தேவை இனி வரும் நாட்களில் அதிகரிக்கும்.

எனவே தமிழகத்தினத் முழு தேவையை நிறைவேற்றிய பின்னர் மீதமுள்ள ஒட்சிசனை பிற மாநிலங்களுக்கு அளித்திடுவதே, சரியான வழிமுறையாகும்.

ஒட்சிசனை பங்கிடும் பொறுப்பை, மத்திய அரசிடம் உயர் நீதிமன்றம் வழங்கியுள்ளது. எனவே பிரதமர் இதில் கவனம் செலுத்த வேண்டும்.

குறித்த ஆலையில் உற்பத்தியாகும் ஒட்சிசனை தமிழகத்தின் முழு தேவைக்க ஏற்ப பகிர்ந்தளிக்கும் பொறுப்பை மேற்கொள்ள வேண்டும். தமிழகத்திற்கு எவ்வகையிலும் அநீதி இழைத்திடக் கூடாது’ எனத் தெரிவித்துள்ளார்.

# பெல் ஆலையில் ஒட்சிசன் உற்பத்தி செய்ய வேண்டும்

## கோருகிறார் வைகோ



சென்னை, ஏப். 29

திருச்சி பெல் ஆலையில் ஒட்சிசன் உற்பத்தி செய்ய வேண்டும் என, வைகோ வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக, ம.தி.மு.க. பொதுச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான வைகோ நேற்று வெளியிட்ட அறிக்கையில்-

திருச்சி பாரத் மிகுமின் நிறுவனத்தில் (BHEL) மருத்துவப் பயன்பாட்டுக்கான ஒட்சிசன் ஆக்கும் தொழிற்கூடம் நல்ல முறையில் இயங்கி வந்தது. பராமரிப்புப் பணிகளை முறையாக மேற்கொள்ளாததால், 2016ஆம் ஆண்டு முதல் நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கின்றது.

அங்கே, 8 மணி நேரத்தில், 1,000 கியூபிக் மீற்றர், அதாவது 150 உருளைகள் ஒட்சிசன் ஆக்கும் திறன் கொண்டது. ஒரு நாளைக்கு மூன்று வேலை நேரங்களில் குறைந்தது 400 உருளைகள் ஒட்சிசன் ஆக்க முடியும். அவ்வாறு கிடைத்த ஒட்சிசன், 2016 ஆம் ஆண்டு வரை, திருச்சி பெல் மருத்துவமனையில் பயன்படுத்தப்பட்டு வந்தது.

பெல் ஆலையின் மேலாண்மைக் கோளாறுகளால், ஐந்து ஆண்டுகள் ஆகியும் இன்றுவரை இயக்கப்படாமல் உள்ளது.

எனவே, தமிழக அரசு, திருச்சி பெல் ஆலையில், ஒட்சிசன் ஆக்கும் பணிகளை உடனே தொடங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என வலியுறுத்துகின்றேன் -என்று தெரிவித்துள்ளார்.

# மே 2ஆம் திகதி திட்டமிட்டப்படி வாக்கு எண்ணிக்கை நடக்கும்

சென்னை, ஏப். 29

தமிழகத்தில் மே 2ஆம் திகதி திட்டமிட்டப்படி வாக்கு எண்ணிக்கை நடைபெறும் என்று தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்ய பிரதாசாகு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தெரிவித்த அவர், ஜூன் அல்லது ஒகஸ்ட் மாதத்துக்கு வாக்கு எண்ணிக்கையை தள்ளி வைப்பது குறித்து தேர்தல் ஆணையம் ஆலோசிக்கவே இல்லை என குறிப்பிட்டார்.

மே 1 மற்றும் 2ஆம் திகதி ஊரடங்கு அறிவிப்பது தொடர்பாக ஆலோசனை மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் கூறினார். இதேவேளை, கொரோனா 2ஆம் அலை வேகமாகப் பரவி வரும் நிலையில், தேர்தல் வெற்றி கொண்டாட்டங்களுக்கு இந்தியத் தேர்தல் ஆணையம் தடை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நாட்டை உடனே முடக்க வேண்டும்

## சுகாதார பரிசோதகர் சங்கம் கோரிக்கை

**கொழும்பு, ஏப். 29**
**நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று வேகமாக பரவி வருகின்றமையினால் நாட்டை உடனடியாக முடக்க வேண்டுமென பொது சுகாதார பரிசோதகர் சங்கம் தெரிவித்துள்ளது.**

தற்போதைய சூழ்நிலையில் நாட்டை முடக்குவதை தவிர வேறு எந்தவொரு மாற்று வழியும் இல்லையென சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண குறிப்பிட்டுள்ளார்.

குறித்த செயல்பாட்டை விரைவாக முன்னெடுக்காவிடின் எதிர்வரும் காலத்தில் நாடு பெரும் ஆபத்தில் சிக்குவதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, நாட்டில் பெரும்பாலான பகுதிகளில் கொரோனா உப கொத்தணி கண்டறியப்பட்டுள்ளதாக தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன எனவும் உபுல் ரோஹண சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆகவே, நாட்டை முழுமையாக முடக்கி உப கொத்தணிகளை கண்டறிந்து தேவையான நடவடிக்கையை விரைந்து எடுக்க அரசாங்கம் முன்வர வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

# உயர்தர பரீட்சை முடிவுகள் 7 நாட்களில் வெளியாகும்

கொழும்பு, ஏப். 29

2020 ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சை பெறுபேறுகள் அடுத்துவரும் 7 நாட்களுக்குள் வெளியிடப்படும் என கல்வி அமைச்சர் ஜீ.எல் பீரிஸ் நேற்று அறிவித்தார்.

பரீட்சை முடிவுகளை வெளியிடுவதற்கான இறுதிக்கட்ட பணிகள் இடம்பெற்று வருகின்றன என அவர் தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்று நோய் நெருக்கடிக்கு மத்தியிலும் இலங்கை முழுவதும் உள்ள 2,648 பரீட்சை நிலையங்களில் கடந்த ஒக்ரோபர் 12 ஆம் திகதி முதல் நவம்பர் மாதம் 6 ஆம் திகதி வரையில் உயர்தர பரீட்சைகள் இடம்பெற்றன. இந்தப் பரீட்சைக்கு மொத்தம் 3 இலட்சத்து 62 ஆயிரத்து 824 பரீட்ச்சார்த்திகள் தோற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கடத்தப்பட்ட மாடுகளுடன் வவுனியாவில் இருவர் கைது

வவுனியா, ஏப். 29

வவுனியாவில் சட்டவிரோதமான முறையில் அனுமதி இன்றி கடத்திச்செல்லபட்ட 10 மாடுகளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை 3 மணியளவில் புளியங்குளம் பகுதியில் இருந்து இக்கிரிகொல்லாவை நோக்கி வாகனம் ஒன்று பயணித்தபோது சிதம்பரபுரம் பகுதியில் அதனை வழிமறித்த பொலிஸார் சோதனைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது குறித்த வாகனத்தில் சட்டவிரோதமான முறையில் மாடுகள் கடத்திச்செலலப்பட்டமை தெரியவந்தது.

வாகனத்தில் இருந்தவர்களை கைது செய்த சிதம்பரபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளுக்காக இருவரையும் வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

சம்பவத்தில் இக்கிரிகொல்லாவை பகுதியை சேர்ந்த இருவரே கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து 10 மாடுகள் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

அவற்றை கடத்திச் செல்வதற்காக பயன்படுத்தப்பட்ட சிறியரக லொறி ஒன்றையும் பொலிஸார் மீட்டனர்.

# கடும் நடவடிக்கை எடுப்பதைவிட அரசுக்கு வேறு வழியே கிடையாது

## கூறுகிறார் கெஹலிய ரம்புக்வெல



கொழும்பு, ஏப். 29

மக்கள் சுகாதார வழிகாட்டுதல்களை பின்பற்ற தவறினால் கடுமையான நடவடிக்கைகளை அமுல்படுத்துவதைவிட அரசாங்கத்துக்கு வேறுவழி கிடையாது என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

கொரோனா தொற்றை கட்டுப்படுத்தவும் அவை பரவாமல் தடுக்கவும் அரசாங்கம் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளதாக அவர் கூறினார்.

ஆனால், குறித்த சுகாதார வழி காட்டுதல்கள் மற்றும் நெறிமுறைகளை நிச்சயம் கடைப்பிடிப்பதன் மூலம் அரசாங்கத்துக்கு உதவவேண்டிய கடப்பாடு மக்களுக்கு இருப்பதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

கொரோனா தொற்றின் முதல் மற்றும் இரண்டாவது அலைகளை அரசாங்கம் கட்டுப்படுத்தியதால், தற்போதுள்ள பாதுகாப்பு விதிமுறைகள் மற்றும் நெறிமுறை மூலம் தொற்று நோயைக் கட்டுக்குள் வைத்திருக்க அரசாங்கம் முயற்சிக்கின்றது என்றும் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

ஆனால், மக்கள் பொறுப்பற்ற முறையில் நடந்துகொண்டால், தொற்றுநோய் ஒரு சுகாதார பேரழிவாக மாறினால் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருக்கும் என்றும் அவர் எச்சரித்தார்.

இதேவேளை, சித்திரை புத்தாண்டின்போது கடுமையான சுகாதார வழிகாட்டுதல்களை விதிக்க அரசாங்கம் தவறிவிட்டமையை நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல ஒப்புக் கொண்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் 142 பேருக்கு பி.சி.ஆர்.பரிசோதனை

யாழ்ப்பாணம், ஏப். 29

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள விரிவுரையாளர்கள் ஆசிரிய மாணவர்கள் உள்ளிட்ட 142 பேருக்கு நேற்று பி.சி.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

நாட்டின் பல்வேறு பாகங்களைக் சேர்ந்த 551 ஆசிரிய மாணவர்கள் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நேரடியாகக் கல்வியைத் தொடரும் நிலையில் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் இப்பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

# மன்னாரில் எதிர்வரும் இரு வாரங்களில் தொற்றாளர்கள் எண்ணிக்கை உயரும்

மன்னார், ஏப். 29

மன்னார் மாவட்டத்தில் தற்போது வரை 351 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சூழ் நிலையை கருத்தில் கொண்டு எதிர் வரும் இரண்டு வாரங்களுக்குள் மன்னார் மாவட்டத்திலும் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றது என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி. வினோதன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று புதன் கிழமை காலை இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போது அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மன்னார் மாவட்டத்தில் ஏப்ரல் மாதம் தற்போது வரை 13 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்த வருடத்தில் 334 தொற்றாளர்களும், மன்னார் மாவட்டத்தில் மொத்தமாக 351 கொரோனா தொற்றாளர்களும் அடையாளம்காணப்பட்டுள்ளனர்.

இந்த மாதம் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்து காணப்பட்டாலும், நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலையை கருத்தில் கொண்டு எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் மன்னார், மாவட்டத்திலும் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றது.

எனவே, மக்கள் சுகாதார வழிமுறைகளை கடைபிடித்து நடந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம். தேவையின்றி வெளியில் செல்வதை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

குறிப்பாக சமய வழிபாட்டு இடங்கள், பொது இடங்களில் அதிகமாக மக்கள் கூடுவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

இதற்கான வழிகாட்டிகளில் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கையின் அடிப்படையில் மாத்திரமே மக்கள் கலந்து கொள்ள வேண்டும்.

அனைத்து இடங்களிலும் சுகாதார துறையினரோ அல்லது பொலிஸாரோ கடமையினை மேற்கொள்வது கடினம். எனவே மக்களுக்கும் நிகழ்வை ஏற்பாடு செய்கின்றவர்களும் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

உரிய கட்டுப்பாடுகளுடன் செயல்படும் பட்சத்தில் எதிர் வரும் இரண்டு வாரங்களில் ஏற்படும் பாதிப்பை தவிர்த்துக் கொள்ள முடியும்.

தற்போது இலங்கையின் சில இடங்களில்பரவிவரும்கொரோனா தொற்றானது காற்று மூலமாக பரவும் என கூறப்படுகின்றது.

காற்று மூலமாக ஒரு வைரஸ் பரவும் என கூறப்பட்டால் குறித்த வைரஸ் தனது இயல்பை திரிவடைந்து பெற்றிருக்கலாம்.

அல்லது சமூகத்தில் அந்த வைரஸின் செறிவு அதிகரித்து காணப்படும்.

மன்னார் மாவட்டத்தை பொறுத்தவரை கடந்த ஜனவரி மாதம் அதிக எண்ணிக்கையான நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டபோதிலும், காற்றினால் பரவும் தொற்று இனம் காணப்படவில்லை. ஆனால், தற்போது காற்றினால் பரவும் தொற்று நாட்டின் சில இடங்களில் அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்த நிலமை மன்னார் மாவட்டத்திலும் ஏற்பட்டால் தொற்றாளர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்துவது கடினமாக இருக்கும்.

நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தால் வைத்தியசாலைகளில் அதிதீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்க வேண்டிய நிலை ஏற்படும்.

எனவே, குறித்த நிலமையை கருத்தில் கொண்டு மக்கள் மிகவும் அவதானமாக செயல்பட்டு மூன்றாவது அலையில் இருந்து உங்களை தற்பாதுகாத்து கொள்வதற்கு நடவடிக்கைளை மேற்கொண்டு எமக்கு ஒத்துழைப்பை வழங்கவேண்டும்-என்றார்.

# நெல்லியடியில் பழக்கடை வைத்திருக்கும் பெண் கரவெட்டி பிரதேச சபைக்கு முன்பாக போராட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 29

நெல்லியடி சந்தைக்கு அண்மையில் பழக்கடை காணப்படுவதால் அதில் இருந்த பழங்களை பிரதேச சபையினர் எடுத்துச் சென்றதை அடுத்து தனக்கு நீதி வேண்டும் என்று கோரி பழக்கடை உரிமையாளரான பெண் தனது பிள்ளைகளுடன் கரவெட்டி பிரதேச செயலகத்துக்கு முன்பாக தீக்குளிக்க முயன்றுள்ளார்.

மிக நீண்டகாலமாக தான் பழ வியாபாரத்தில் ஈடுபட்டு வருவதாகவும், சந்தைக்கு அண்மையில் பழக்கடை இருப்பதால் அது சந்தை வியாபாரத்துக்கு இடையூறு எனத் தெரிவித்து பிரதேசசபை ஊழியர்கள் பழங்களை அள்ளிச் சென்றனரென குறித்த பெண் குற்றஞ்சாட்டினார்.

இதனால், அவர்கள் அள்ளிச் சென்ற பழங்களுக்கான நட்டஈட்டை தமக்கு வழங்குமாறு கோரியே எரிபொருள் நிரப்பிய போத்தல் ஒன்றுடன் அவர் அங்கு போராட்டத்தில் ஈடுபட்டார். சம்பவ இடத்துக்கு பொலிஸாரும் சென்று விசாரணை மேற்கொண்டனர்.

# கொரோனா தீவிரம் அடைய சுகாதார அமைச்சே காரணம்

## சுகாதார சேவைகளின் வல்லுநர்கள் சங்கம் சுட்டிகாட்டு

கொழும்பு, ஏப். 29

**நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் சடுதியாக அதிகரித்து வருகின்றமைக்கு சுகாதார அமைச்சே பொறுப்பேற்க வேண்டுமென சுகாதார சேவைகளின் வல்லுநர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**

சுகாதார சேவைகளின் வல்லுநர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் இவ்விடயம் தொடர்பாக மேலும் கூறியுள்ளதாவது: பி.சி.ஆர். பரிசோதனைகளை குறைப்பதன் ஊடாக கொரோனா வைரஸை அரசாங் கம் கட்டுப்படுத்தியது.

அரசாங்கத்தின் செயற்பாட்டு விளைவே நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ளது. ஆகவே, கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் அதிகரித்தமைக்கான பொறுப்பை அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும்.

மேலும், குறித்த தொற்று நாடு முழுவதும் சடுதியாக பரவி வருகின்றமையினால், அதனை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது தொடர்பாக சிறந்த செயல்திட்டங்களை அரசாங்கம் விரைந்து முன்னெடுக்க வேண்டும் - என்றார்.

# கொரோனா வைரஸ் தொற்றாளர்களால் நிரம்பியுள்ள கம்பஹா வைத்தியசாலை

கொழும்பு, ஏப். 29

கம்பஹா வைத்தியசாலை கொரோனா வைரஸ் தொற்றாளர்களினால் தற்போது நிரம்பியுள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொரோனா வைரஸ் தொற்றாளர்களுக்காக சிகிச்சையளிக்க அமைக்கப்பட்ட கம்பஹா பொது வைத்தியசாலையிலுள்ள அறையின் படுக்கைகள் மற்றும் வெரெல்லவத்தவிலுள்ள பெண்கள் கொரோனா சிகிச்சை மையத்திலுள்ள படுக்கைகள் நிரம்பியுள்ளன.

ஆகவே, கொரேனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ள நோயாளர்களை ஏனைய சிகிச்சை நிலையங்களுக்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

கம்பாஹா வைத்தியசாலையில் 120 படுக்கைகள் மாத்திரமே உள்ளமை குறிப்பிடத்தக்கது.



# வவுனியா நகரின் பல பகுதிகளில் தொற்று நீக்கும் செயற்பாடுகள்

வவுனியா, ஏப். 29

நாடளாவிய ரீதியில் கொரோனா தொற்றின் தாக்கம் அதிகரித்து வருகின்ற நிலையில் வவுனியாவில் அதனை கட்டுப்படுத்தும் முகமாக வன்னி இராணுவ தலைமையகத்தினால் தொற்று நீக்கும் செயல்பாடு முன்னெடுக்கப்பட்டது.

பொதுமக்களின் நடமாட்டம் அதிகளவில் காணப்படும் பகுதியான வவுனியா பஜார் வீதி , இலுப்பையடி சந்தி , மொத்த மரக்கறி விற்பனை மையம் , குடியிருப்பு வீதி , ஹொரவப்பொத்தானை வீதி , புதிய பேருந்து நிலையம் , கண்டி வீதி என்பவற்றில் நேற்று காலை 8.00 மணியளவில் தொற்று நீக்கும் நடவடிக்கை இடம்பெற்றிருந்தது.

குறித்த பகுதிகளிலுள்ள வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக நகரசபை தீயணைப்புப் பிரிவினரின் உதவியுடன் தண்ணீர் ஊற்றி சுத்தம் செய்யப்பட்டதுடன் நடைபாதைகள் போன்றவற்றிற்கு இராணுவத்தினரால் தொற்று நீக்கி மருந்தும் வீசப்பட்டது.

# உக்ரைன் சுற்றுலா பயணிகள் வருகை கொரோனா தீவிரம் அடைய காரணமா?

## ஆனந்த சாகர தேரர் கேள்வி

கொழும்பு, ஏப். 28

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள விரைவான கொரோனா வைரஸ் பரவல் அண்மையில் உக்ரைன் பிரஜைகள் நாட்டுக்கு வந்ததன் மூலம் உருவாகியதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது என்று பஹியங்கல ஆனந்த சாகர தேரர் தெரிவித்துள்ளார்.

களுத்துறையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

நாட்டுக்கு வந்தவுடன் உடனடியாக ஹோட்டல்களுக்கு அனுப்பப்பட்ட உக்ரைன் சுற்றுலாப் பயணிகளுக்கு 14 நாள் கட்டாய தனிமைப்படுத்தல் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டுள்ளது.

உக்ரைன் பிரஜைகள் நாட்டில் சுதந்திரமாக சுற்றித் திரிந்தனர். தொற்றுநோய்க்கு மத்தியில் சபாரி சுற்றுப்பயணங்கள் சென்றனர்.

ஆகவே, புதிய திரிபடைந்த வைரஸ் உக்ரைன் சுற்றுலாப் பயணிகள் மூலமாக நாட்டுக்குள் நுழைந்ததா என்பது குறித்து நாங்கள் கவலை கொண்டுள்ளோம்.

கடைகளுக்கு பொருட்களை வாங்க, சந்தைக்கு செல்ல, நகரங்களில் அன்றாட நடவடிக்கைகளை நடத்தியதற்காக பொதுமக்கள் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

அரசாங்கம் மற்றும் அதன் பங்காளிகளின் நடவடிக்கைகள் காரணமாக இலங்கை ஒரு கொவிட் -19 நெருக்கடியை சந்திக்கிறது. பொதுமக்களின் செயல்களால் அல்ல-என்றார்.



# ரிஷாத்தை விடுவிக்க கோரி வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

வவுனியா, ஏப். 29

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியூதீனை விடுதலை செய்யுமாறு கோரி வவுனியாவில் ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட செயலகத்துக்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த ஆர்பாட்டகாரர்கள் -

ரிஷாத் பதியூதீனை அதிகாலையில் சென்று கைது செய்யப்பட்டதையிட்டு வேதனையடைகின்றோம். பாராளுமன்ற உறுப்பினரான அவரை கைது செய்வதாக சபாநாயகருக்குக் கூட அறிவித்தல் விடுக்கப்படவில்லை. அவரது கைதுக்கு வன்மையாக கண்டனங்களை தெரிவிக்கின்றோம். அரசு தன் தோல்வியை மறைப்பதற்காக இவ்வாறான கைதுகளை முன்னெடுத்து வருகின்றது.

சிறுபான்மை சமூகங்களுக்கு முன்னெடுக்கப்படும் அநீதிகளுக்கெதிராக வீதியில் இறங்கியே நாம் போராட வேண்டியுள்ளது. எனவே எமது தலைவரை விடுவிக்காத பட்சத்தில் நாடளாவிய ரீதியில் எமது போராட்டங்கள் தொடர்ந்து கொண்டிருக்கும்- என்றனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் அரசுக்கு ஆதரவு வழங்காததற்கா இந்த கைது, சிறுபான்மைத் தலைமைகளை விடுதலை செய், உண்மையான சூத்திரதாரிகளை கைது செய், அரசே பழிவாங்காதே போன்ற வாசகங்கள் தாங்கிய பதாதைகளை ஏந்தியிருந்ததுடன் கோசங்களையும் எழுப்பினர்.

இதன்போது வவுனியா நகரசபையின் தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினரான ரி. கே. இராசலிங்கம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர்களான ஏ. ஆர். எம். லரிப், அப்துல் பாரி உட்பட பலரும் இதில் கலந்துகொண்டிருந்தனர்.

(அ)



# உரம், பூச்சிகொல்லி மருந்துகள் தடைக்கு அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஏப். 29

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் முன்வைக்கப்பட்டுள்ள இரசாயன உரம், பூச்சிகொல்லி மருந்துகளுக்கு தடை விதிக்கும் யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்த தகவலை விவசாயத் துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே வெளியிட்டுள்ளார்.

புர்கா உட்பட முகத்தை மறைக்கும் உடைகளுக்கு நேற்று முன்தினம் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தமை தெரிந்ததே.

# சுகாதார விதிமுறைகளை மீறுவோர் மீது நடவடிக்கை

கிளிநொச்சி, ஏப். 29

சுகாதார விதிமுறைகளை மீறுவோர் மீது கண்காணிப்பு கமெரா மூலம் அவதானிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என கரைச்சி பிரதேச சபை தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன் தெரிவித்தார்.

கிளிநொச்சி ஊடக மையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது உள்ள கொவிட் பரம்பல் உண்மையில் மக்களை அச்சத்துக்குள்ளாக்கியுள்ளது. இந்தியாவில் இடம்பெறும் சம்பவங்களை அவதானிக்கின்ற போது மீண்டும் ஒரு அவலம் எமது மக்களுக்கு ஏற்பட்டு விடக்கூடாது என்ற விடயத்தை தெளிவுபடுத்துகின்றது.

அந்த வகையில் கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் ஆளுகையின் கீழ் உள்ள மக்கள் அதிகம் கூடும் பகுதிகள் தொடர்பில் அதிக அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

கிளிநொச்சி சேவைச்சந்தை தம்புள்ளையுடன் நேரடி தொடர்பை பேணும் சந்தையாக காணப்படுகின்றது. இந்த நிலையில் அதிக அவதானம் செலுத்தப்படுகின்றது. தொற்று நீக்கல் செயற்பாடுகளை மேற்கொள்ளல், கடந்த காலங்களைப் போன்று சேவைச் சந்தை நடைமுறைகளை மீண்டும் அமுல்ப்படுத்தல் உள்ளிட்ட விடயங்கள் தற்போது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கொவிட் பரவல் தொடர்பில் மக்கள் விளிப்படைய வேண்டும். இவ்வாறான நிலையில் வர்த்தகச் செயற்பாடுகளில் ஈடுபடும்போது சுகாதார நடைமுறைகளை முழுமையாக பின்பற்ற வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது, இதேவேளை பொது மக்களும் இவ்விடயம் தொடர்பில் அவதானமாக செயற்படவேண்டும் என வேண்டப்படுகின்றீர்கள்- என்றார்.

# கொரோனா பரவும் வேகம் அதிகரிப்பு!

## சுதத் சமரவீர எச்சரிக்கை



**கொழும்பு, ஏப். 29**

**நாட்டில் இந்த முறை கொரோனா பரவலின் வேகம் அதிகரித்துள்ளதாக தொற்றுநோய் தடுப்புப் பிரிவு அறிவித்துள்ளது.**

தற்போது அடையாளம் காணப்படும் கொரோனா தொற்றாளர்களில் அதிகமானோர், நாம் ஏற்கனவே அடையாளம் கண்டு தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்திய நபர்களுடன் முதலாவது தொடர்புகளைப் பேணியவர்கள் என அந்தப் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

இதனை ஒரு சாதாரணமாக விடயமாகக் கருத முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், முதலாவது கொரோனா தொற்று அலையின் போது அதற்கு முகங்கொடுக்கும் வகையில் வைத்தியசாலைகளை தயார்ப்படுத்தினோம். அதே போல் தேவையான அளவுக்கு தற்போதும் அவற்றை ஒழுங்கு படுத்தியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

தற்போது தம்மிடம் போதியளவு வசதிகள் உள்ளன எனவும் அவர் மேலும் கூறினார்.

# 90 ஆவது இடத்தில் இலங்கை!

கொழும்பு, ஏப். 29

கொரோனா 3ஆவது அலை தொற்று பரம்பல் காரணமாக திணறிவரும் இலங்கை உலகளாவிய கொரோனா பாதிப்பு நிலையில் 90ஆவது இடத்தை பிடித்துள்ளது.

இதுவரையான நாடகளில் அதிகூடிய தொற்றுப் பதிவாக நேற்று முன் தினம் ஆயிரத்து 96 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து இலங்கையில் மொத்த தொற்று ஒரு இலட்சத்து 487 ஆக அதிகரித்துள்ளது.

இதன் மூலம் உலகளாவிய கொரோனா பாதிப்பு நிலை தரவுகளின் அடிப்படையில் 90 ஆவது இடத்தில் இலங்கை உள்ளது.

89ஆவது இடத்தில் உள்ள கியூபாவில் ஒரு இலட்சத்து 3 ஆயிரத்து 524 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை, 3 கோடி 29 இலட்சத்து 27 ஆயிரத்து 91 தொற்றாளர்களுடன் முதலாவது இடத்தில் அமெரிக்காவும்,

ஒரு கோடி 79 இலட்சத்து 88 ஆயிரத்து 637 தொற்றாளர்களுடன் இந்தியா இரண்டாவது இடத்திலும்,

ஒரு கோடி 44 இலட்சத்து 46 ஆயிரத்து 541 தொற்றாளர்களுடன் பிரேசில் மூன்றாவது இடத்தடதிலும் தொடர்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# 3ஆவது அலையால் திணறும் குருநாகல்!

## 87 கிராம சேவகர் பிரிவுகள் முடக்கம்

கொழும்பு, ஏப். 29

இலங்கையில் சடுதியாக கொரோனா தொற்று பரம்பல் அதிகரித்து வரும் நிலையில் குருநாகல் மாவட்டத்தில் அதிகளவான தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர்.

நேற்று முன்தினம் இலங்கையில் ஆயிரத்து 111 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டிருந்த நிலையில் குருநாகல் மாவட்டத்தில் மட்டும் 119 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஏப்ரல்-10 ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரையான காலப் பகுதியில் 100 - 250 இற்கு இடைப்பட்ட தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் ஏப்ரல் 18 ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதி வரையான காலத்தில் குருநாகல் மாவட்டத்தில் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்களது எண்ணிக்கை 1000 இற்கும் 1500 இற்கும் இடைப்பட்டதாக அதிகரித்துள்ளது.

இதன் மூலம் இலங்கையில் கொரோனா அபாயமுள்ள மாவட்டங்களில் ஒன்றாக குருநாகல் மாவட்டம் மாறியுள்ளது.

தற்போது இலங்கையின் 7 மாவட்டங்களில் 100 கிராம சேவகர் பிரிவுகள் முடக்கப்பட்டுள்ளன. இவ்வாறு முடக்கப்பட்டுள்ள 100 கிராம சேவகர் பிரிவுகளில், குருநாகல் மாவட்டத்தில் மட்டும் குறிப்பாக குளியாப்பிட்டி பொலிஸ் அதிகார பிரதேசத்தில் அடங்கியுள்ள 87 கிராம சேவகர் பிரிவுகள் உள்டங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் கொட்டாவ வெளியேறல் பகுதி மூடப்பட்டது

கொழும்பு, ஏப். 29

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் கொட்டாவ வெளியேறல் பகுதி, மறு அறிவித்தல் வரை நேற்று புதன் கிழமை காலை 6 மணி முதல் மூடப்பட்டுள்ளது.

கொட்டாவ வெயியேறல் பகுதியில் பணிப்புரிந்த 3 ஊழியர்களுக்கு, கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமையை தொடர்ந்தே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆனாலும் அம்புலன்ஸ் மற்றும் பஸ்கள் செல்வதற்கு மாத்திரம் கொட்டாவ வெளியேறல் பகுதி திறக்கப்படுமென வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. இதேவேளை, தெற்கு அதி வேக நெடுஞ் சாலையின் ஊடாக பயணம் மேற்கொள்பவர்கள் கஹதுடுவ மற்றும் அத்துருகிரிய வெளியேறல் பகுதிகளை பயன்படுத்து மாறும் வீதி அபிவிருத்தி அதிகார சபை கூறியுள்ளது.

மேலும் கொட்டாவ நுழைவாயில் ஊடாக தெற்கு அதிவேக நெடுஞ்சாலைக்குள் செல்ல முடியும். ஆனால் கட்டணம் அறவிடப்படமாட்டாது எனவும் வீதி அபிவிருத்தி அதிகார சபை அறிவித்துள்ளது.

# 6 மாதங்களுக்கு ஒட்சிசன் போதியளவு கையிருப்பில்

கொழும்பு, ஏப். 29

நாட்டிலுள்ள அனைத்து வைத்தியசாலைகளுக்கும் தேவையான ஒட்சிசன், 6 மாதங்களுக்கு கையிருப்பில் உள்ளதாக ஒட்சிசனை விநியோகிக்கும் பிரதான நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

களுபோவில வைத்திய சாலையில் ஒட்சிசன் பற்றாக்குறை இருப்பதாகவும் நோயாளியின் உயிருக்கு ஆபத்து இருப்பதாகவும் வெளியான செய்தி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில் குறித்த தகவலில் உண்மையில்லை என சுகாதார அமைச்சு தெரிவித்திருந்தது.

மேலும் எவ்வளவு காலத்துக்கு ஒட்சிசன் கையிருப்பில் இருக் கின்றது என்பது தொடர்பாக ஆராய்ந்து உடனடியாக அறிவிக்குமாறு ஒட்சிசனை விநியோகிக்கும் பிரதான நிறுவனங்களுக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்த்தன அறிவித்திருந்தார்.

இந்நிலையிலேயே ஒட்சிசன் விநியோகிக்கும் பிரதான நிறுவனங்கள், ஒட்சிசன் 6 மாதங்களுக்கு கையிருப்பில் உள்ளதாக தற்போது அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கோவக்ஸ் மூலம் 14இலட்சம் தடுப்பூசிகள் ஜூன் மாதத்துக்குள் இலங்கைக்கு வரும்

கொழும்பு, ஏப். 29

உலக சுகாதார அமைப்பின் தலைமையிலான கோவக்ஸ் (covax) சர்வதேச பொது கொவிட்19 தடுப்பூசித் திட்டத்தின் கீழ் ஜூன் மாதத்துக்குள் இலங்கைக்கு அதிக தடுப்பூசிகள் கிடைக்கும் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

ஜூன் மாதத்துக்குள் இலங்கைக்கு 14 இலட்சத்து 40 ஆயிரம் தடுப்பூசிகள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக அமெரிக்கத் தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையின் மொத்த மக்கள் தொகையில் 20 வீதம் பேருக்கு கோவக்ஸ் தடுப்பூசித் திட்டத்தின் மூலம் இலவச தடுப்பூசி வழங்கப்படும் என உலக சுகாதார அமைப்பு ஏற்கனவே அறிவித்துள்ளது. கோவக்ஸ் தடுப்பூசியின் முதல் தொகுதியாக 2 இலட்சத்து 64 ஆயிரம் தடுப்பூசிகள் கடந்த மார்ச் மாதம் இலங்கைக்கு வழங்கப்பட்டன.

இந்நிலையில் மே மாத இறுதியில் அல்லது ஜூன் ஆரம்பத்தில் மேலும் 14 இலட்சத்து 40 ஆயிரம் தடுப்பூசிகள் கிடைக்கவுள்ளன. மீதமுள்ளவையும் இவ்வாண்டுக்குள் வந்து சேரும்.

கோவக்ஸ் தடுப்பூசி நன்கொடையாளர்களின் நிதியளிக்கப்படும் பொதுத் தடுப்பூசித் திட்டமாகும். இத்திட்டத்துக்கு அமெரிக்கா 2 பில்லியன் டொலர்களை வழங்கியுள்ளது என அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

# ஆசிரியர் கலாசாலைகளும் மூடப்பட்டது

கொழும்பு, ஏப். 29

நாட்டில் உள்ள எட்டு ஆசிரியர் கலாசாலைகளும் தற்போதைய கொவிட் நிலைமையைக் கருத்தில் கொண்டு எதிர்வரும் மே மாதம் 09 ஆம் திகதி வரை நேரடிக் கற்றல் செயல்பாடுகள் நிறுத்தப்படுகின்றன என கல்வி அமைச்சின் ஆசிரிய கல்விப் பணிப்பாளர் ஆர்.எம்.எம். ரத்நாயக்கா ஆசிரிய கலா சாலைகளின் அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

கடந்த ஏப்ரல் 19 ஆம் திகதி ஆசிரியர் கலாசாலைகளில் நேரடிக் கற்றல் செயற்பாடுகள் ஆரம்பித்திருந்த நிலையில் தற்போதைய கொவிட் பரவலைக் கருத்தில் கொண்டு கலாசாலை செயல்பாடுகளை இடைநிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் இணைய வழியில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப் படவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# நாட்டில் இம்மாதம் -87, இந்த ஆண்டு -451 கொரோனா மரணங்கள் இதுவரை பதிவு

கொழும்பு, ஏப். 29

இலங்கையில் இவ்வாண்டில் இதுவரை 451 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன.

நேற்று முன் தினம் பதிவான 8 கொரோனா மரணங்களுடன் இந்த மாதத்தில் மட்டும் இதுவரை 87 பேர் கொரோனாவுக்குப் பலியாகியுள்ளனர். அத்துடன், நாட்டில் பதிவான மொத்த கொரோனா உயிரிழப்புக்கள் 655 ஆக அதிகரித்துள்ளன.

நாட்டில் ஆபத்தான புதிய திரிவு கொரோனா வைரஸ் பரவிவருவதாகக் கூறப்படும் நிலையில் ஒரு நாள் அதிகளவாக நேற்று முன் தினம் 1,111 கொரோனா தொற்று நோயாளர்கள் பதிவாகினர்.

தொற்று நோயாளர் தொகை அதிகரிப்பதுடன், தீவிர சிகிச்சை தேவைப்படும் நோயாளர் தொகையும் அதிகரித்து வருகின்றது.

எனினும், இலங்கையில் அனைத்து தீவிர கிசிச்சைப் பிரிவுகளும் ஏற்கனவே நிரம்பியுள்ளதால் அடுத்துவரும் நாட்களில் இலங்கை கடும் நெருக்கடியை எதிர்கொள்ள நேரிடலாம் என எச்சரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 13ஆவது திருத்தத்தை உறுதிப்படுத்தும் பின்னோக்கிய பார்வை

ஒஸ்ரின் பெர்னாண்டோ
தமிழில் : வி. சிவலிங்கம்

சமீபத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நிலைமைகள் உகந்ததாக இருக்கும்போது மாகாண சபைத் தேர்தல்களை நடத்தலாம் எனத் தெரிவித்திருந்தார். அதேவேளை, மாகாணசபைகளை அகற்றுமாறு அமைச்சர் சரத் வீரசேகர வலியுறுத்தியிருந்தார். தெரிவுசெய்யப்பட்ட மாகாண சபைகள் தற்போது இயங்காத நிலையில், அவை யாப்பிலிருந்து நீக்கப்பட்டதாகவே கொள்ளப்பட வேண்டுமென தூதுவர், நளின் டி சில்வா கூறுகிறார். இவற்றை அவதானிக்கும்போது, 13ஆவது திருத்தம் தொடர்பாக ஒன்றிற்கொன்று போட்டியிடும் மூன்று நிலைப்பாடுகள் புலப்படுகின்றன.

(அ) 13ஆவது திருத்தம் அப்படியே இருப்பதாக பிரதமர் நம்புகிறார்.

(ஆ) கோட்பாட்டு அடிப்படையில் 13ஆவது திருத்தம் இன்னமும் இருப்பதாகவும், அதனை நிச்சயம் ஒழிக்க வேண்டும் எனவும் அமைச்சர் வீரசேகர கூறுகிறார்.

(இ) 13ஆவது திருத்தம் ஏற்கெனவே இறந்துவிட்டதாக தூதுவர் சில்வா எண்ணுகிறார்.

பிரதமர் வெளியிட்ட கருத்தைத் தொடர்ந்து, பாராளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் இவை பற்றிக் குறிப்பிடுகையில், “13ஆவது திருத்தம் அரசியல் யாப்பின் பகுதியாக உள்ளது. அதற்கான தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும். மாகாணசபைகளை ஆளுநர்கள் மற்றும் அதிகாரிகளால் காலவரையின்றி இயக்க முடியாது” என்கிறார்.

**13ஆவது திருத்தமும், அதன் அமுலாக்க இயங்கியலும்**

இப் பின்னணியில், எனது மதிப்பிற்குரிய பேராசிரியர் ஜெரால்ட் பீரிஸின் கட்டுரையைப் படித்தேன்.

(அ) உண்மையான அதிகார பகிர்வு

(ஆ) இலங்கையின் இறையாண்மை பிராந்திய ஒருமைப்பாட்டை சட்டபூர்வமாகப் பாதுகாப்பதை உறுதி செய்வதற்காக மாகாண சபைகளை ஒழிப்பதையும், அரசியல் யாப்பு வழிமுறைகளால் மாற்றுவதையும் அவர் வலியுறுத்துகிறார். இதற்குச் சான்றாக அவர் டச்சு மற்றும் பிரித்தானிய காலங்களை மறுபரிசீலனை செய்கிறார். அதன்மூலம், மாகாணங்கள் உருவாகிய வரலாற்றினைப் பற்றிய ஒரு வரலாற்றுப் பகுப்பாய்வினை அவர் வெளிப்படுத்துகிறார். பேராசிரியர். மத்தும பண்டார, மாகாணங்கள் குறித்து வேறு பகுப்பாய்வினைத் தந்துள்ளார்.

இங்கு, 13ஆவது திருத்தத்தினை எந்த அரசாங்கமும் முழுமையாகச் செயற்படுத்தவில்லை என்ற போதிலும், பிரதான முன்னணி அரசியல்வாதிகள், அரசியல் கட்சிகள் இதுகுறித்து தீர்மானிக்காத அல்லது இத் திருத்தம் குறித்து எதிர் நிலைப்பாடுகளை உடையோர் மௌனமாக இருந்த போதிலும், 1997 மற்றும் 2000ஆம் ஆண்டுகளின் இடைப்பட்ட காலங்களில் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 2009ஆம் ஆண்டில் 13ஆவது திருத்தத்தினை சர்வதேச மனித உரிமை ஆணைய தீர்மானங்களில் இணைத்ததன் மூலம் ஏற்றுக்கொண்டிருந்தார். அதனையே 2015ஆம் ஆண்டில் அமைந்த நல்லாட்சி அரசாங்கத்தினர்



மீண்டும், மீண்டும் தொடர்ந்து இணைத்துச் சென்றனர். எனவே, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் நல்லாட்சி அரசாங்கத்தின் தலைவர்கள் உணர்வுபூர்வ அடிப்படையில் அதனை ரத்துச்செய்யக் கூடாது என நம்புகிறேன்.

இந்த முன்னேற்றங்கள் பேராசிரியர். ஜி. எல். பீரிஸினால் விவாதிக்கப்படவில்லை. அவை முக்கியமான அம்சங்கள் என நம்புகிறேன். ஏனெனில், அவை சர்வதேச இராஜதந்திரம், சர்வகட்சிப் பரிந்துரைகள் மற்றும் பிற தாக்கங்கள், விளைவுகளுடன் இணைந்துள்ளன.

எவ்வாறிருந்தபோதிலும், கருத்தியல் அடிப்படையில் அதிகார பகிர்வு எம் அரசியலிற்குள் இருப்பிடத்தைப் பெற்றுள்ளது. இது உள்ளடக்கத்தில் இணைந்துள்ளதோடு, ஓர் அரசியல் இயங்கியலையும் தோற்றுவித்துள்ளது. தமிழ் அரசியல் கட்சிகள், இந்தியா, சர்வதேசம், புலம்பெயர் மக்கள் மற்றும் பிளவுகளுக்கு அப்பால் செயல்படும் அரசியல் தலைவர்கள் (ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நீங்கலாக - அவர் அரசியலற்ற ஒருவராக தம்மை வெளிப்படுத்துவதால்) பலரும் இந்த நிலையை உருவாக்குவதில் கணிசமான அளவு பங்களித்துள்ளார்கள். இருப்பினும், தொடர்ச்சியாக தேவை காரணமாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் நிலைப்பாடுகளை அவர்கள் ஏற்றுள்ளார்கள் அல்லது பாராட்டுகிறார்கள்.

**இந்தியாவின் வலிமையான செல்வாக்கு**

இங்கு இப் பிரச்னையில் வலிமையான செல்வாக்குச் செலுத்தும் காரணியாக இந்தியா உள்ளது. அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் எங்கள் அதிகார பகிர்வில் தொடர்ந்து ஆர்வம் காட்டிவந்துள்ளன. பிரதமர்கள் ராஜீவ் காந்தி, மன்மோகன் சிங், தற்போது நரேந்திர மோடி ஆகியோரின் கொள்கைகளிலிருந்து அவை தெளிவாகின்றன. அத்துடன், தமது நிலைப்பாட்டைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோருக்கும் தெளிவுபடுத்தியுள்ளனர். இந்தத் தலையீடுகள் அதிகார பகிர்வை அதிகரிப்பதில் முக்கிய பங்கைச் செலுத்தியிருப்பதை எமது தலைவர்கள் மறந்துள்ளனர் போலும். அவ்வாறான தலையீடுகள்பற்றி நாம் அவர்களிடமிருந்து கேள்விப்படுவதில்லை.

13ஆவது திருத்தத்தினை ஆதரித்த வரலாறுகளை, இன்று பாராளுமன்றத்திற்கு முதன்முறையாக வந்துள்ள இளைய தலைமுறையினர் இவ்வாறான கடந்த காலத்தை அறிந்திருக்க வாய்ப்பில்லை. அல்லது அவர்கள் இணங்கிச் செல்கிறார்கள்.

ஏற்கெனவே குறிப்பிட்ட தலைவர்கள் அதிகார பகிர்வை இணைக்க உதவினார்கள் என்பது, அதனைக் குறைத்து மதிப்பிடும் விரோத நகர்வுகள் என்பது அர்த்தமல்ல. மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸவின் அதிகார பரிமாற்றச் சட்டம் மாவட்ட நிர்வாகங்களில் தாக்கத்தை ஏற்படுத்தியது. அத்துடன், மாகாணசபைகளின் அதிகாரங்களின் சில பிரிவுகள் மத்தியின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டதன் காரணமாக ஏற்பட்ட சில பிரிவுகளின் இழப்புகள் ஏற்பட்டன. இதேபோல், கிராம அளவில் குறைக்கப்பட்ட அளவிலான செயற்பாட்டாளர்கள் உதாரணமாக, கிராம சேவையாளர்களை முன்னாள் ஜனாதிபதி டி. பி. விஜயதுங்க உள்துறை அமைச்சின்கீழ் கொண்டு வந்தார்.

**அதிகார பகிர்வை மீள் வலுப்படுத்தல்**

அதிகார பகிர்வை மேலும் மேம்படுத்தும் வகையில் 1997ஆம் ஆண்டில் ‘அரசியலமைப்பு சீர்திருத்தங்களுக்கான முன் மொழிவுகள்’ என்ற தலைப்பில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முயற்சித்தார். அப்போதைய அமைச்சர்களான மஹிந்த ராஜபக்ஷ, சமல் ராஜபக்ஷ, நிமல் சிறீபால டி சில்வா, ஜி. எல். பீரிஸ், சுசில் பிரேம் ஜயந்த் என்போர் அதற்கு ஆதரவாக செயற்பட்டனர். ஆனால், அவர்கள் இன்று அவைபற்றிப் பேசமாட்டார்கள்.

அதிகார பகிர்வை வலியுறுத்தும் இரண்டாவது முயற்சியாக, 2000ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் புதிய அரசியல் யாப்பினை உருவாக்குவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டன. அந்தவேளையிலும் மேற்குறிப்பிட்ட நபர்கள் அதிகாரத்திலிருந்தனர். அத்துடன், முன்மொழியப்பட்ட மாற்றங்களை ஆதரித்து ஏற்றிருந்தனர். இப்போது அவர்கள் அவைபற்றிப் பேசாது மௌனமாக உள்ளனர்.

தற்போது பாராளுமன்ற உறுப்பினர்களாக உள்ள முன்னாள் முதலமைச்சர்களான சுசில் பிரேம் ஜயந், சாமர சம்பத், ஷான் விஜயலால் டி சில்வா, சி. வி. விக்னேஸ்வரன் மற்றும் நஜிர் அகமட், முன்னாள் ஆளுநர். சீதா அரம்பேபோலா ஆகியோர் அதிகார பகிர்வை வலுப்படுத்த தற்போது ஆதரவாக உள்ளார்களா என்பது எனக்கு ஆச்சரியமாக உள்ளது.

சந்திரிகா குமாரதுங்க மேற்கு மாகாணத்தின் முதல்வராக செயற்பட்ட வேளையில், மாகாணசபைத் தீர்மானத்தை நிறைவேற்றிய வேளையில் அதற்கு ஆதரவாக சுசில் பிரேம் ஜயந்த், பீலிக்ஸ் பெரேரா என்போர் பொலிஸ் அதிகாரங்களையும் பகிர்ந்தளிக்க வேண்டுமென மிகவும் கடுமையாகக் கோரினர். சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியான பின்னர், மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதுபற்றிக் கவலைப்படவில்லை. தற்போது, விடுதலைப் புலிகளுடனான முரண்பாடுகள் இல்லை என்பதால் மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்குமாறு கோருவார்களா? என்பது எனக்கு ஆச்சரியமாக உள்ளது.

தற்போது புதிய அரசியல் யாப்பினை உருவாக்க ரொமேஷ் டி சில்வா தலைமையிலான குழு நியமிக்கப்படுவதற்கு முன்பதாக, அரசியல் யாப்பினைத் திருத்துவதற்கான சில திட்டங்கள் முன்வைக்கப்பட்டன. அதிகார பகிர்விற்கான 13ஆவது திருத்தத்துடன் 17ஆவது, 18ஆவது, 19ஆவது திருத்தங்களில் நிர்வாகத்தைச் சீர்ப்படுத்தும் நோக்கில் மீளாய்வுகள் செய்யப்பட்டன. ஆனால், 13ஆவது திருத்தத்தில் மாற்றங்களை மேற்கொள்ள முயற்சிக்கவில்லை.

1997, 2000ஆம் ஆண்டுகளில் அரசியல் யாப்பில் அதிகார பகிர்வை நோக்கிய சீர்திருத்த திட்டங்கள், 2015 இற்குப் பின்னரான வழிநடத்தல் குழு முன்மொழிவுகள் காத்திரமான ஒரு கருத்திற்கு வழி வகுக்கவில்லை. தற்போது மேற்கொள்ளப்படும் முயற்சியில் காணப்படும் முக்கிய வேறுபாடு என்னவெனில், நல்லாட்சி காலத்தில் அரசியலமைப்பு சபையில் வழிநடத்தல் குழு செயற்பட்டது. ஆனால், தற்போதைய முயற்சிகள் யாவும் பாராளுமன்றத்தின் பங்களிப்பு இல்லாமல், யாப்பு வரைதல் என்பது அரசாங்கத்தின் விவகாரமாக மாற்றப்பட்டுள்ளது. இது, அரசியலமைப்பை உருவாக்குவதற்கான மிக மோசமான வழிமுறையாகும். இதற்கு நியாயங்களாக அரசாங்கத்திற்கு தற்போது பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை உள்ளதால், அதனடிப்படையில் இவை தொடர்வதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த நல்லாட்சிக் காலத்தில் அமைக்கப்பட்ட வழிநடத்தல் குழுவால் நியமிக்கப்பட்ட ஆறு துணைக் குழுக்களில் தற்போதைய அமைச்சர்களான பிரேம் ஜயந்த் (பொது சேவை திருத்தங்கள்) பந்துல குணவர்த்தன (நிதி) போன்றவற்றையும், இன்றைய எதிர்க் கட்சியைச் சேர்ந்த சாகல ரத்நாயக்க (பொது பாதுகாப்பு) டி. சித்தார்த்தன் ( மைய - சுற்று உறவுகள் ) போன்ற இவை யாவும் அதிகார பகிர்வு தொடர்பானவை. ஏனைய இரண்டு துறைகள் நீதித் துறை, அடிப்படை உரிமைகள் என்பனவாகும். புதிய அரசியல் யாப்பினை வரைய முயற்சிக்கும்போது புதிய சில்லுகளைத் தேடி அலையாமல், தற்போதைய குழு இத் துணைக்குழு அறிக்கைகளி லிருந்து போதிய தகவல்களைப் பெற முடியும்.

**1997 மற்றும் 2000ஆம் ஆண்டின் அதிகார பகிர்வு முன்மொழிவுகள்**

1997ஆம், 2000ஆம் ஆண்டின் முன்மொழிவுகள் அச்சில் கிடைக்கின்றன. மிகச் சமீபத்தில் பேராசிரியர். ஜெரி பீரிஸ் மாகாணங்களின் பரிமாணங்கள் பற்றி விபரித்துள்ளார். அவர் வரலாற்றின் முன்னேற்றத்தின்போது மாகாணங்களின் பரிமாணங்களில் மாற்றங்கள் ஏற்படும் எனக் கருதியதால் அதிகாரத்தை வலுப்படுத்துவதற்கான யோசனைகளில் சில தேர்ந்தெடுக்கப்பட்ட அம்சங்களை இப்போது பார்க்கலாம். ஏனெனில், 1997இலும், 2000ஆம் ▶

ஆண்டிலும் தரப்பட்ட அதிகார பகிர்வு திட்டங் கள் மிகவும் புரட்சிகரமானவை. 1997 இல் வழங்கப்பட்ட ஆவணம் உட்சுற்றுக் கானது. ஆயினும், 2000ஆம் ஆண்டு ஆவணத்தில் கே. என். சொக்ஸி போன்ற புகழ்பெற்ற சட்ட வல்லுநர்களால் எதிர்க் கட்சி தரப்பிலிருந்தும் உள்ளீடுகள் வழங்கப்பட்டன.

இதில் எனது கவலைக்குரிய பிரச்னை என்னவெனில், அரசாங்கத்திலுள்ள மூத்த தலைவர்களின் மௌனம் என்பது அதிகார பகிர்விற்கான வெவ்வேறு அணுகுமுறைகளை ஆதரித்துச் செல்வதாகும். பல்வேறு கேள்விக்குரிய பிரச்னைகள் காணப்பட்டபோதிலும் உதாரணமாக, காணி அதிகாரம் சம்பந்தமாக பிரச்னை



கள் உள்ளபோதிலும் அவைபற்றித் தற்போது விவாதிக்க விரும்பவில்லை. 1997இன் முன்மொழிவுகளில் தேசிய காணி ஆணைக்குழுவை ஒழிப்பதற்கான ஓர் முயற்சியாக திட்டமிடப்பட்டிருந்தது. பின்னர் 2000ஆம் ஆண்டு திட்டங்களில் அவை சரி செய்யப்பட்டன.

**மாகாணசபை எல்லை நிர்ணயம்**

இங்கு மாகாணசபை எல்லைகளை அவதானிப்பின் சில விமர்சகர்கள் நாட்டின் இறையாண்மை மற்றும் தேசிய பாதுகாப்புபோன்ற காரணங்களைக் காட்டி வடக்கு, கிழக்கு மாகாணங்களின் எல்லைகளை மறுத்து வருகின்றனர். ஆனால், 1997ஆம் ஆண்டு அன்றைய அரசாங்கம் கிழக்கு மாகாணத்தின் இரண்டு மாவட்டங்களை வடக்கு மாகாணத்துடன் இணைக்க முன்மொழிந்தது. இந்த இரண்டு மாவட்டங்களிலுள்ள மக்களிடம் ஒப்புதல் வாக்களிப்பு நடத்துவதாகவும் கூறப்பட்டது. 2000ஆம் ஆண்டு முன்மொழிவுகளில் அவ்வாறான வாக்கெடுப்பின் பின்னர் வட,கிழக்கு மாகாணத்தை உருவாக்க அவர்கள் ஒப்புக்கொண்டனர். அதனை இன்னொரு தெரிவாக இந்தியர்கள் முன்வைத்தனர். ஆனால், அதற்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

முஸ்லிம் மக்கள் அதிக ஆதிக்கம் செலுத்தும் தென் - கிழக்கு பிராந்திய சபையை நிறுவ அவர்கள் தயாரானார்கள். அதாவது, அம்பாறை வாக்குப் பிரிவில் பெரும்பான்மையான சிங்களப் பகுதியைப் புறம் ஒதுக்கி, அதனை ஊவா பிராந்தியத்துடன் இணைத்து இரண்டு பிராந்தியங்களிலுமிருந்த மக்கள் குடிப்பரம்பலில் மாற்றத்தை ஏற்படுத்தினர். இவ்வாறான முயற்சியின்போது அம்பாறை மாவட்டத்திலுள்ள மீதமுள்ள 40 சதவீத தமிழ், சிங்கள மக்கள் சிறுபான்மையினராக மாறுவர் என்பதை அவர்கள் நன்கு அறிந்திருந்தனர்.

இதேபோன்ற நிலையே அதாவது, அம்பாறை - ஊவா இணைப்பின்போது ஏற்பட்டதுபோலவே திருகோண மலையிலுள்ள சிங்கள மக்கள் நிலையும் ஏற்பட்டது. அந்த மக்களை வட - மத்திய பிராந்தியத்துடன் இணைப்பதற்கான வாய்ப்புகள் கிடைக்காமையால் அதே விதியையே இந்த மக்களும் அனுபவித்தார்கள்.

கிழக்கின் ஆளுநராக நான் செயற்பட்ட வேளையில் அந்த உணர்வுகளை நான் புரிந்துகொண்டேன். வடக்கு, கிழக்கிலுள்ள சிங்கள மக்களின் மீட்பர்களாக தம்மைக் கருதும் அரசியல்வாதிகளால் இதனையே செய்யமுடிந்துள்ளது.

ஒருவகையில், கிழக்கில் பூர்வீகமாக வாழும் முஸ்லீம் மக்களுக்கு அரசியலமைப்பின் 20ஆவது திருத்தத்திற்கு வாக்களித்தமையால் தென் - கிழக்கு அலகு வழங்கப்படலாம் என பெருமிதமடையக்கூடும்.

**ஆளுநர்கள்**

13ஆவது திருத்தத்தின் பிரகாரம் ஆளுநர்களை நியமிப்பது ஜனாதிபதியின் உரிமையாகும். ஆனால், 1997இல் தெரிவிக்கப்பட்ட முன்மொழிவுகள் முதலமைச்சரின் ஆலோசனையுடன் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதன் மூலம் ஜனாதிபதியின் உரிமையைக் குறைக்க முயற்சிகள் எடுக்கப்பட்டன. இங்கு பொலீஸ் அதிகாரங்களை ஒரு மாகாண பொலீஸ் ஆணைக்குழுவிற்கு வழங்குவதற்கு எதிராக இந்த அரசியல்வாதிகள் பயன்படுத்திய ஆயுதம் இதில் முதலமைச்சரின் பங்களிப்பு தொடர்பான அம்சமாகும். இதனால் 2000ஆம் ஆண்டின் முன்மொழிவுகளில் முதலமைச்சரின் ஒப்புதல் மற்றும் அரசியலமைப்பு சபையின் ஒப்புதல் போன்றவற்றில் மேலும் நிபந்தனைகள் விதித்துத் தடை செய்தனர். அந்த முன்மொழிவு நடைமுறைப்பட்டிருந்தால் ஜனாதிபதியின் அதிகாரங்கள் மேலும் குறைக்கப்பட்டிருக்கும்.

1997, 2000ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் சிறுபான்மைக் கட்சிகளுக்கு மிகவும் சாதகமாக அமைந்திருக்கும். 2000ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தால் ஆளுநர்களாக நியமிக்கப்படுபவர்களின் பெயர்கள் பாராளுமன்றக் குழுவில் சமர்ப்பிக்கப்பட்டு, அதன் அபிப் பிராயங்களும் ஜனாதிபதியின் ஒப்புத லுக்கு மேலும் வலுவை அளித்திருக்கும்.

ஆளுநர்களை நீக்குவது தொடர்பான அம்சங்கள் 13ஆவது திருத்தத்தில் காணப்பட்டவை போலவே 2000ஆம் ஆண்டு முன்மொழிவுகளிலும் இருந்தன. அதுவே 1997ஆம் ஆண்டு முன்மொழிவுகளிலும் இருந்தது. ஆனால், 2000ஆம் ஆண்டு முன்மொழிவுகளில் மேலும் ஒரு விசாரணைக்குழு அம்சம் அதில் இணைக்கப்பட்டிருந்தது. அது ஆளுநரின் செயற்பாட்டை அளவீடு செய்வதாக அமைந்திருந்தது.

**மாகாண நிறைவேற்று அதிகாரங்கள்**

நிறைவேற்று அதிகாரங்கள் சம்பந்தமான விபரங்கள் 13ஆவது திருத்தத்தில் ஒரு தனியான பிரிவாகத் தரப்பட்டுள்ளது. பின்னர் அவை 1997, 2000ஆம் ஆண்டு முன்மொழிவுகளில் மேலும் விரிவாக்கப்பட்டன. அதில் ஒப்பந்தங்களுக்கான கூடுதல் பொறுப்புகள் பிரிவு 130(2) இலும், ஒப்பந்தங்களின்போது ஏற்பட்ட தனிப்பட்ட பொறுப்புகளுக்கான விதிவிலக்கு 130(2)(6) இலும் வழங்கப்பட்டுள்ளன.

1997, 2000 ஆண்டு முன்மொழிவுகளில் நிறைவேற்றுக்குழு முறையும், அதன் அமைச்சகத்திற்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புகள், செயற்பாடுகள் பற்றிய கலந்துரையாடலுக்கு அதிகார இடமளிக்கப்பட்டுள்ளது. முன்மொழியப்பட்ட பிரிவில் அங்கத்தவரின் செயற்பாடுகளைவிட அவரது தெரிவிற்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

இந்திய மாநிலங்களில் இக் குழுமுறை மிகவும் சக்தி வாய்ந்தவை. மசோதாக்களைப் படிப்பதற்கான கால அவகாச கட்டுப்பாடுகள் காரணமாகவே இக் குழு அமைப்பு முறை அதிகம் விரும்பப்படுகிறது. இதன்மூலம் மசோதாக்கள் தொடர்பான பரந்த விவாதத்திற்கு வாய்ப்பை வழங்குகிறது. இக் குழு முறை என்பது சட்டங்களை ஆராய்வதைத் தவிர, பல்வேறு திணைக்களங்கள், அவற்றின் கொள்கைகள் மற்றும் வரவு - செலவுத் திட்ட ஒதுக்கீட்டையும் ஆராய்கின்றன. இவை ஒரு வகையான 'மினி - பாராளு



மன்றங்கள்' எனலாம். இவை, சட்டமியற்றுவதில் நிபுணத்துவத்தை வளர்ப்பதற்கும், அதில் பங்குபற்றுபவர்கள் தமது குடிமக்களுடன் முறைப்படி ஈடுபடுவதற்கும், சம்பந்தப்பட்டவர்களின் உள்ளீட்டு அறிவாற்றலைத் தேடுவதற்கும் அதன்மூலம் பல்வேறு அம்சங்களில் ஒருமித்த கருத்தை எட்டுவதற்கும், அதற்கான வலுவான தளத்தை வழங்குவதற்கும், கொள்கைகளை முகாமைத்துவப்படுத்தி பலப்படுத்துவதற்குமான ஒருமேடையைத் தருகின்றன.



இத்தகைய ஏற்பாடுகள் என்பது பாராளுமன்றத்தில் சட்டங்களை ஆழமாக காண விரும்பாதவர்களுக்கு வெறுக்கத்தக்கவையாக இருக்கலாம். எவ்வாறாயினும், இக் கலந்துரையாடல்கள் நேர்மறையான, ஆக்கபூர்வமான முன்மொழிவுகளைத் தர முயற்சிக்கப்பட்டுள்ளன என்ற உண்மைகளை முன்னிலைப்படுத்த வேண்டியுள்ளது.

**சட்டவாக்கம்**

13ஆவது திருத்தத்தில் சட்டத்தை உருவாக்குவதற்கான அரசியலமைப்பு ஏற் பாடுகள் எதுவுமில்லை. எனவே, மாகாணசபைகள் சட்ட மா அதிபரின் தயவில்தான் தங்கிச் செயற்பட வேண்டியுள்ளது. வடக்கு, கிழக்கிலுள்ள இரண்டு மாகாணசபைகளும் ஒரு பொருத்தமற்ற ஏற்பாட்டின் அடையா ளமாக இருப்பதைக் காணமுடிகிறது. இதனாதால்தான், சட்டங்களை உருவாக்குவதில் மெதுவான போக்கி னையே காணமுடிகிறது.

சட்டங்களை உருவாக்குவதற்கான நிபுணத்துவம் பொதுவாகவே மாகாணசபைகளில் இல்லை. எந்தவொரு நிறுவனங்களிலும் சட்ட ஏற்பாட்டிற்கான தெளிவுபடுத்தல்கள் மிகவும் தாமதமாகவே நிகழ்கின்றன. இதன் காரணமாகவே பிராந்தியங்களுக்கான சட்ட அதிபர் பற்றிய யோசனைகள் 1997 இன் முன்மொழிவுகளிலும், அட்வகேட் ஜெனரல் நியமனம் 2000ஆம் ஆண்டு முன்மொழிவுகளிலும் முன் வைக்கப்பட்டது. இந்த இரு முன்மொழிவுகளுடன் சட்டத்தை உருவாக்கும் வலுவை 13ஆவது திருத்தத்திற்கு வழங்கியுள்ளது.

**தேர்தல்களுக்கான ஆரவாரங்கள்**

மாகாணசபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்பட வேண்டுமா? மாகாணசபைகள் தேவையா? தேவையில்லையா? என்ற வாதங்களுக்குள் நான் செல்லவில்லை.

இங்கு அதிகார பகிர்வு என்ற கருத்தியல் 13ஆவது திருத்தத்திலிருந்து தொடர்ந்து விரிவுபடுத்தப்பட்டுள்ளது என்பதனையே இங்கு முன்வைக்க விரும்புகிறேன். இதே கருத்தினை உடையவர்களே புதிய அரசியல் யாப்பிற்காக காத்திருக்காமல், 19ஆவது திருத்தத்திற்குப் பதிலாக 20ஆவது திருத்தத்தைக் கொண்டுவந்தபோது, ஏற்கெனவே இவ்வாறான வர்ணனைகளை முன் வைத்தவர்கள் அமைதியாக இருந்தனர்.

**முடிவுரை**

இக் கட்டுரை, 13ஆவது திருத்தம் என்பது அதிகார பகிர்வு தொடர்பாக எதிர் காலத்தில் முடிவு செய்வதற்கான அடிப்படை என மட்டும் கருதக் கூடாது என்பதை வலியுறுத்துகிறது.

இரண்டாவதாக, 1987 முதல் 2020 வரை தொடரும் பிரச்னைகளில் குறைந்த அளவில் விவாதிக்கப்பட்ட சிக்கல்கள் பற்றிய விபரங்களை முன்னிலைப்படுத்துகிறது. இவை இன்னமும் பொதுவெளியில் உள்ளன. இவற்றை அரசியல்வாதிகளும், அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குபவர்களும் தமது தீவிர கவனத்திற்கு எடுத்தல் வேண்டும்.

மூன்றாவதாக, தற்போதைய அரசாங்கத்தின் முக்கிய தலைவர்களில் சிலர் அதிகார பகிர்வின் ஆதரவாளர்களாக இருந்து, மேலே குறிப்பிட்ட ஆவணங்களைத் தயாரிப்பதில் முக்கிய பங்கு வகித்திருந்தனர். இவர்கள் நாட்டின் முக்கிய நிர்வாகக் கட்டுமானங்களின் வளர்ச்சிக்கு வழங்கிய நன்மைகளை நினைவில் கொள்ளவேண்டும். அதைவிட, அவற்றை மேலும் சிறப்பிக்க உதவவேண்டும். இவை அரசியலில் மட்டுமல்லாமல், நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதிலும் கிடைக்கும் ஒரு பயிற்சி ஆகும். அத்துடன் நாட்டின் நல்வாழ்விற்கும் அவசியமாகும்.

நான்காவதாக, இத்தகைய முயற்சிகள் தொடர்பாக தற்போதைய அரசாங்கத் தலைவர்களிடமிருந்து ஒப்புதல்பெற்று மேற்கொண்ட நடவடிக்கைகளும் அங்கு உள்ளன என்பதால், அவற்றை நேர்மறையாக அணுகி, அரசியல் வாதங்களை முன்வைத்து, மேலும் முன்னேற்றத்திற்குப் பங்களிக்கவேண்டும்.

இறுதியாக, நல்லிணக்கம் மற்றும் மறுசீரமைப்பில் ஈடுபடும் அரசாங்கம் உண்மையான முயற்சியை மேற்கொள்ள வேண்டும். இவையே ஜெனீவா தீர்மானங்களுக்கு உதவும். ●



# புலமைச் சிகரம்

## ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

## 53

**2008 19,20,34,35**

**2020 38**

**03.Reasoning காரணம் காணுதல்**

இதன் அடிப்படை வருமாறு

யாதாயினும்ஒரு பெறுபேறை அல்லது அந்த பெறுபேறினை தரவல்ல காரணங்களை அடையாளம் காணுதல்.

**03A. அதற்குக் காரணம் இதுவாகும் அல்லது சரியான கூற்றைத் தெரிவு செய்தல்**

**2008 19**

**2008 ஆம் ஆண்டு 21ஆம் நூற்றாண்டின் முதல் தசாப்பத்திற்குரியதாகும்..தன் பிரகாரம்**

**19.உமது பிறந்த ஆண்டு**

19.ஆம் நூற்றாண்டின் பத்தாம் தசாப்தத்திற்குரியதாகும்.

20 ஆம் நூற்றாண்டின் முதல் தசாப்தத்திற்குரியதாகும்.


**20 ஆம் நூற்றாண்டின் பத்தாம் தசாப்தத்திற்குரியதாகும்.**

21 ஆம் நூற்றாண்டின் முதல் தசாப்தத்திற்குரியதாகும

**ஏனெனில் ஆண்டு 5 படிக்கும் நீர் 20 ஆம் நூற்றாண்டின் பத்தாம் தசாப்தத்திற்குள் பிறந்திருக்க வேண்டும்.**

**2008 20**

20.ஆம் நூற்றாண்டின் 6ஆம் தசாப்தத்திற்குரிய ஆண்டு **விடை1.** 1955





6ஆம் தசாப்தத்திற்குரிய ஆண்டு 1955

**எனவே சரியான விடை 1**

**2008 21**

ஒரு விளையாட்டு மைதானத்தில் உள்ள 10 பேர்களிடையே

- 7 பேர் குடையைப் பிடித்துக் கொண்டும்
  6 பேர் தொப்பியை அணிந்து கொண்டும் இருக்கின்றனர்.
  அவர்கள் அனைவரும் குடையைப் பிடித்துக் கொண்டோ: தொப்பியை அணிந்து கொண்டோ இருக்கின்றனர்.
- சிலர் தொப்பியை அணிந்து கொண்டும், குடையைப் பிடித்துக் கொண்டும் இருக்கின்றனர்.
- அவ்வாறு தொப்பியை அணிந்து கொண்டும், குடையைப் பிடித்துக் கொண்டும் இருப்பவர்களின் எண்ணிக்கை யாது?




3 பேர் ஆகும்

**எனவே சரியான விடை 1**

**2008 36,37**

நான் வானத்தில் பறப்பேன்,

மிகவும் மேலே உள்ள வானத்தில் முகில்களுக்கிடையேயும் நான் சில வேளைகளில் பறக்கின்றேன்.

சிறகுகளை ஆசைக்காமல் என்னால் பறக்கத்தக்கதாக இருத்தல் புதுமையான விடயமாகும்.

நான் பறக்கும் போது சத்தம் உண்டாகின்றமையால் கீழே உள்ளவர்கள் நான் வானத்தில் பறப்பதை அறிந்து கொள்வர்.

விசேடமாகச் சிறிய பிள்ளைகள் என்னைப் பார்த்து மகிழ்ச்சி அடைவதை நான் அறிவேன்.

நான் மரங்களில் தங்கியிருப்பதில்லை.

நான் விசேட இடங்களில் மாத்திரமே இறங்குவேன்.

**எனவே சரியான விடை விமானம் ஆகும்**

நான் பல்வேறு நிறங்களைக் கொண்டுள்ளேன்.
சிலவேளை களில் சிவப்பாக இருப்பேன்.
கபில நிறமாக இருப்பேன். நீல நிறமாக இருப்பேன். வெண்ணிறமாக இருப்பேன்.
சிலவேளை களில் எனக்கு நிறமே இல்லை.
சில விசேட சந்தர்ப்பங்களில் மனிதர்கள் என்னைக் குடிப்பர்.
என்னைக் குடிப்பதன் மூலம் மனிதருக்கு நன்மையன்றித் தீமை ஏற்படுவதில்லை .
எனினும் பெரும்பாலனவர்கள் விருப்பமின்றி என்னைக் குடிப்பதை நான் அறிவேன்.
விசேடமாகச் சிறு பிள்ளைகள் என்னைக் குடிக்க விரும்புவதில்லை.
.........................................................................................................

**எனவே சரியான விடை மருந்து அல்லது ஔடதம் ஆகும்**

**ஆசிரியர் அன்னமையா - 076 056 5786**

# சீன பாதுகாப்பு அமைச்சர் வருகை துறைமுக நகருடன் தொடர்புபடாது

*தயாசிறி ஜயசேகர விளக்கம்*

**கொழும்பு,ஏப்.29**

**சீன பாதுகாப்பு அமைச்சரின் இலங்கை வருகைக்கும் கொழும்பு துறைமுக நகர பொருளாதார சட்டமூலம் தொடர்பான விவகாரங்களுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜெயசேகர கூறியுள்ளார்.**



இதேவேளை, கொரோனா வைரஸ் பரவல் துரிதமாக அதிகரித்து வருகின்ற நிலையில், அனைவரும் பாதுகாப்பாக இருப்பதுடன், அரசாங்கம் எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் நாட்டு மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் அமைந்துள்ள - உலக வர்த்தக மையத்தில் ஆடை தொழிற்சாலை திணைக்களத்துக்கான பயிற்சி ஆலோசகர்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

கொரோனா வைரஸ் பரவல் மீண்டும் தீவிரமடைந்துள்ளது. இதன் காரணமாக குருநாகல் மற்றும் குளியாப்பிட்டி ஆகிய பகுதிகளில் சில பிரதேசங்கள் முடக்கப் பட்டுள்ளன. இவ்வாறு முடக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு போதிய நிவாரணங்களை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இந்நிலையில், வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கம் எடுக்கும் தீர்மானங்களுக்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். சித்திரைப் புத்தாண்டு காலப்பகுதியில் அரசாங்கம் நாட்டை முடக்காவிட்டாலும், மக்களைப் பாதுகாப்பான முறையில் பண்டிகைக்கால கொண்டாட்டங்களில் ஈடுபடுமாறு அறிவுறுத்தல்களை வழங்கியிருந்தது.

எனினும், மக்களின் பொறுப்பற்ற செயல்பாடு காரணமாக மீண்டும் வைரஸ் பரவல் தொடர்பில் நெருக்கடி நிலைமை தோற்றம் பெற்றுள்ளது. இந்தியாவில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமை பாரியதொரு அச்சுறுத்தலாகும். இத்தகைய தொரு நிலைமை எமது நாட்டுக்கு ஏற்படக்கூடாது.

அரசாங்கம் வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு தடுப்பூசி வழங்கி வருகின்றது. இந்நிலையில் நாட்டை மீண்டும் முடக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டால், நாட்டின் பொருளாதாரம் மேலும் பாதிப்பை எதிர்நோக்க வேண்டி ஏற்படும்.

இதேவேளை, இந்தியாவிலுள்ள தொற்றாளர்களை நாட்டுக்கு அழைத்து வந்து சிகிச்சை அளித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்தளவுக்கு இலங்கையிடம் போதிய வசதிகள் இல்லை. இந்நிலையில் வீடுகளில் இருப்பவர்கள் தேவையின்றி வெளியில் செல்வதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

இந்நிலையில், சீன பாதுகாப்பு அமைச்சரின் வருகைக்கும், கொழும்பு துறைமுக நகர பொருளாதார சட்டமூலத்துக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. அவர் வேறொரு விடயம் சம்பந்தமாகவே நாட்டுக்கு வந்துள்ளார்.

கொழும்பு துறைமுக நகர சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றத்தில் பரிசீலனைகள் இடம்பெற்று வருகின்றன. அதற்கான முடிவுகள் கிடைக்கப் பெற்றதன் பின்னரே அது சார்ந்த தீர்மானங்கள் எடுக்கப்படும். இதன்போது வெளிநாட்டவர்கள் இலங்கையில் முதலீடு செய்வதை நாம் அதிகரிக்க வேண்டுமே தவிர அதனைக் கட் டுப்படுத்த முயற்சிக்கக் கூடாது. முதலீடு செய்பவர்கள் சீனர்களா?, ஜப்பானியர்களா? என்று பார்ப்பதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும். நாட்டுக்கு முதலீட்டாளர்களே அவசியமாக இருக்கின்றனர்- என்றார். (எ)



# 25 இலட்சம் ரூபாய் பெறுமதியான பெருந்தொகை கொக்கெய்ன் மீட்பு

கொழும்பு,ஏப்.29

ஜமைக்காவிலிருந்து நாட்டுக்கு அனுப்பப்பட்ட பெருந்தொகை கொக்கெய்ன் போதைப்பொருள்களை இலங்கை சுங்கப்பிரிவின் போதைப் பொருள் கட்டுப்பாட்டு பிரிவு அதிகாரிகள் கைப்பற்றினர்.

போதைப்பொருள் அடங்கிய இந்தப் பொதி, சீதுவையைத் தளமாகக் கொண்ட ஒரு தனியார் கூரியர் சேவை மூலம் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டது.

ஒரு வாரத்துக்கு முன்னர் நாட்டுக்கு வந்த அந்தப் பொதி தொடர்பில் சந்தேகம் எழுந்த நிலையில், சுங்க அதிகாரிகள் அதன் பெறுநரை வரவழைத்து பொதியைச் சோதனையிட்டனர்.

இதன்போதே குறித்த பொதியிலிருந்து கொக்கெய்ன் போதைப்பொருள் தொகை மீட்கப்பட்டதுடன், அவற்றின் பெறுமதி 25 இலட்சம் ரூபாய் எனவும் மதிப்பிடப் பட்டுள்ளது.

இதன்போது 44 வயது கொழும்பு, நாரஹேன்பிட்டி பகுதியைச்சேர்ந்த பொதியின் பெறுநர் சுங்க அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டார். (எ)

# எதிர்க்கட்சியை பழிவாங்குவதன் மூலம் கொரோனாவை கட்டுப்படுத்த முடியாது

## ஜனாதிபதியிடம் ராஜித எம்.பி. கோரிக்கை



கொழும்பு,ஏப்.29

**கொரோனா வைரஸ் தொற்று நிலைமையால் நாடு பல நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ள போதிலும், அரசாங்கத்தை விமர்சிக்கின்றவர்களை கைது செய்வதிலேயே அதிக அவதானம் செலுத்தப்படுகின்றது. எதிர்க்கட்சியினரை பழிவாங்குவதால் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த முடியாது. எனவே, சகல கட்சிகளையும் ஒன்றிணைத்து அவற்றுடன் கலந்துரையாடி மக்களுக்கான சிறந்த வேலைத்திட்டத்தை முன்னெடுக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுப்பதாக ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்: அரச வைத்தியசாலைகளில் சகல தீவிர சிகிச்சைப் பிரிவுகளும் நிரம்பியுள்ளன. அத்தோடு தற்போது வைரஸ் அறிகுறிகள் எவையும் ஏற்படாமல் நேரடியாக நிமோனியா நிலைமை ஏற்படுகிறது. இது பாரிய அச்சுறுத்தலாகும். தற்போதுள்ள வைரஸ் ஏற்கனவே இனங்காணப்பட்டதா? அல்லது வெளிநாடுகளிலிருந்து பரவியதா? என்பது இன்னும் இனங்காணப்படவில்லை.

அத்தோடு இதுவரையில் மேலதிகமாக செயற்கை சுவாச கருவிகளும் அரசாங்கத்தால் கொள்வனவு செய்யப்படவில்லை. பல மாவட்டங்களிலும் இதுவரையில் கொரோனா தடுப்பிற்கான மத்திய நிலையமும் அமைக்கப்படவில்லை. சிகிச்சை மற்றும் தீவிர சிகிச்சை வசதிகள் காணப்படுகின்ற வைத்தியசாலைகள் பல உபயோகிக்கப்படாமல் உள்ளன.

கொரோனா கட்டுப்படுத்தலுக்கு தடுப்பூசியே தீர்வு என்று ஜனாதிபதி கூறியுள்ள போதிலும், அவற்றை பெற்றுக்கொள்வதற்கு முறையான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவில்லை. ஆனால், தற்போது 13 மில்லியன் தடுப்பூசிகள் தேவைப்படுகின்றன. தற்போது ஏற்பட்டுள்ள நிலைமையில் சகலருக்கும் தடுப்பூசி வழங்க வேண்டி ஏற்பட்டுள்ளது.

கொரோனா நிலைமையால் இவ்வாறு பல நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ள போதிலும், அரசாங்கத்தை விமர்சிக்கின்றவர்களைக் கைது செய்வதிலேயே அதிக அவதானம் செலுத்தப்படுகின்றது. எதிர்க்கட்சியினரைப் பழிவாங்குவதால் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த முடியாது.

எனவே, சகல கட்சிகளையும் ஒன்றிணைத்து அவற்றுடன் கலந்துரையாடி மக்களுக்கான சிறந்த வேலைத்திட்டத்தை முன்னெடுக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கின்றோம்- என்றார்.

(எ)

## தனிமைப்படுத்தல் பகுதி பொலிஸார் யாரும் கடமைக்கு சமுகமளிக்க தேவையில்லை

### பொலிஸ் தலைமையகம் விஷேட அறிவிப்பு

கொழும்பு,ஏப்.29

பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கு பொலிஸ் தலைமையகத்திலிருந்து விஷேட அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

யாராவது ஒரு பொலிஸ் அதிகாரி தனிமைப்படுத்தல் பகுதியில் வசித்து வந்தால் அவர் கடமைக்குச் சமுகமளிக்காமல் தனிமைப்படுத்தல் காலம் முடிவடையும் வரையில் அந்தப் பகுதியில் தங்கியிருக்குமாறு அவர் தெரிவித்தார்.

அத்துடன் பொலிஸ் நிலையங்களில் பயன்படுத்தும் தகவல் புத்தகம் தொடர்பில் விஷேட சுற்றறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

அதில் இந்தத் தகவல் புத்தகத்தை பயன்படுத்துவதை மட்டுப்படுத்துமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

கொரோனா பரவலைக் கட்டுப்படுத்தும் விதமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார். (எ)

## மே தினத்தை தனித்து நடத்தும்

# சுதந்திர கட்சி தீர்மானத்தை கொரோனா தடுத்து விட்டது

கொழும்பு,ஏப்.29

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மே தினப் பேரணியை தனித்து நடத்துவதற்குத் தீர்மானித்திருந்த போதிலும், கொரோனா வைரஸ் பரவல் தீவிரத்தால் அதனை நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனினும், கட்சியின் தொழிற்சங்கத்துடன் கலந்துரையாடி தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கையை ஜனாதிபதிக்கு கையளிக்க எதிர்பார்த்துள்ளோம் என இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்தார்.

ஆடை தொழிற்சாலை திணைக்களத்துக்கான பயிற்சி ஆலோசகர்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வு அமைச்சரின் தலைமையில் உலக வர்த்தக மையத்தில் இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

சுதந்திரக் கட்சியின் மே தினப் பேரணி காலாகாலமாக தனித்தே நடத்தப்பட்டு வந்துள்ளது. இதற்கமைய இம்முறையும் அவ்வாறு நடத்தவே தீர்மானித்திருந்தோம். எனினும், வைரஸ் பரவல் காரணமாக மே தினப் பேரணிகளை நடத்த வேண்டாம் எனக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அதனால் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பில் ஆராய்ந்து பார்த்து ஜனாதிபதியிடம் அறிக்கையொன்றை சமர்ப்பிக்க எதிர்பார்த்துள்ளோம்.

இந்நிலையில், கட்சியின் முன்னேற்றம் தொடர்பில் கட்சியின் உறுப்பினர்களுடனான கலந்துரையாடல்கள் இடம்பெற்றுவருகின்றன. இதற்கமைய எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல் தொடர்பிலும் இதன்போது பேசப்பட்டு வருகின்றது. தேர்தல் தொகுதி ஒன்றுக்கு மூன்று உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவது மற்றும் மேலதிக உறுப்புரிமை வழங்கல் போன்ற செயல்பாடுகளுக்கு நாம் எதிர்ப்பை தெரிவிப்பதுடன் அரசாங்கத்தின் சிறந்த செயல்பாடுகளுக்கு ஒத்துழைப்பை வழங்குவோம்.

இதேவேளை, கட்சியின் முன்னேற்றத்துக்காக நாம் தொடர்ந்தும் செயல்பட்டு வருகின்றோம். இந்நிலையில் கட்சிக்குள் ஏதேனும் சிக்கல்கள் ஏற்பட்டால் அதனைச் சுமூகமாக தீர்க்க நடவடிக்கை எடுப்போம். கட்சி உறுப்பினர்களுடன் மாத்திரமே கலந்துரையாடல்கள் இடம்பெற்றிருந்தன.

கேள்வி: பாராளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோ அண்மையில் பாராளுமன்றத்தில் சுதந்திரக் கட்சி தொடர்பில் பல்வேறு கருத்துக்களை முன்வைத்து விட்டு, மறுநாள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இதுதொடர்பான உங்களது கருத்து என்ன?

பதில்: பாராளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோ வைத்தியசாலையில் ஏன் சேர்க்கப்பட்டார் என்பது தொடர்பில் எமக்குத் தெரியாது. எனினும் 2 வருடங்களுக்கு முன்னர் அவர் தெரிவித்த சில விடயங்கள் தொடர்பில் வாக்குமூலம் பெற்றுக்கொள்வதற்காகவே அவரை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டால் இங்கு சென்று வாக்குமூலம் வழங்குவதே சிறந்த செயல்பாடாகும்- என்றார். (எ)

## கைது, தடுத்துவைத்தல் சட்டவிரோதமானது

# ரிஷாத் மற்றும் ரியாஜ் ஆகியோரின் மனைவிமார் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு



கொழும்பு,ஏப்.29

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர், ரிஷாத் பதியுதீன், அவரது சகோதரர் ரியாஜ் பதியுதீன் ஆகியோர் கைது செய்யப்பட்டமை மற்றும் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை சட்டவிரோதமானது எனக் குறிப்பிட்டு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ரிஷாத் பதியுதீனின் மனைவி சிஹாப்தீன் ஆயிஷா, ரியாஜ் பதியுதீனின் மனைவி பாத்திமா இஷ்ரத் ஆகியோர் சட்டத்தரணி ஆனல்ட் பிரியந்தன் ஊடாக இந்த முறைப்பாட்டை முன்வைத்தனர்.

கடந்த 24 ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை 3.20 மணிக்கு கொழும்பு 7, பௌத்தாலோக்க மாவத்தையிலுள்ள வீட்டில் வைத்து தனது கணவரான ரிஷாத் பதியுதீன் கைது செய்யப்பட்டார் என அவரது மனைவி முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ள நிலையில், அன்றைய தினம் அதிகாலை 1.30 மணியளவில் தனது கணவர் வெள்ளவத்தை, பெட்ரிகா வீதியிலுள்ள வீட்டில்வைத்து கைது செய்யப்பட்டார்என ரியாஜ் பதியுதீனின் மனைவி குறிப்பிட்டுள்ளார்.

அதன் பின்னர் இவர்கள் இருவரும் சி.ஐ.டி.யில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனக் குறிப்பிடும் இவ்விருவரின் மனைவிமார், ரிஷாத் மற்றும் ரியாஜின் கைதும், தடுத்து வைத்தலும் சட்டவிரோதமானது எனக் குறிப்பிட்டுள்ளனர்.

அரசியல், மதம் மற்றும் இன ரீதியிலான கைது நடவடிக்கையாகவே, இந்த இருவரின் கைதும் உள்ளது என அவர்கள் தங்கள் முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளனர்.

குறிப்பாக ரிஷாத் பதியுதீன், தற்கொலை குண்டுதாரி ஒருவரின் நெருங்கிய குளோசஸ் எனும் செப்புத் தொழிற்சாலைக்கு சட்டதிட்டங்களுக்குப் புறம்பாக அதிக செப்பினை விநியோகம் செய்ததாக குற்றம் சுமத்தப்படும் நிலையில் அது அடிப்படையற்றது என முறைப்பாட்டாளர் ஆவணங்களையும் இணைத்துக் கூறியுள்ளார்.

குறிப்பாக செப்பு விநியோகம், தனது கணவர் அமைச்சராக இருந்தபோது அவரது அமைச்சின் கீழ் இடம்பெற்றாலும் அதில் அமைச்சருக்கு தலையீடு செய்ய முடியாது என முறைப்பாட்டாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதி செயலகம் ஊடாக குளோசஸ் நிறுவனத்துக்கு செப்பு வழங்க முன்வைக்கப்பட்டிருந்த பரிந்துரை தொடர்பிலும் முறைப்பாட்டாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ரியாஜ் பதியுதீன் சார்பிலான முறைப்பாட்டில், அவர் ஏற்கனவே இதே குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு 6 மாதங்களுக்கு மேல் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டதன் பின்னர் சாட்சியங்கள் இல்லை என விடுவிக்கப்பட்டதாகவும் தற்போது மீளவும் அதே விடயங்களைக் கூறி கைது செய்யப்பட்டுள்ளதாகவும் முறைப்பாட்டாளர் கூறியுள்ளார்.

இந்நிலையில், இவ்விருவரின் கைதும் அரசியல், மத, மற்றும் இன ரீதியிலானது எனவும் அதற்கு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரொஹான் பிரேமரத்ன, விஷேட விசாரணைப்பிரிவு இலக்கம் 3 இன் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் ஜெயசேகர உள்ளிட்டோர் பொறுப்புக்கூற வேண்டும் எனவும் முறைப்பாட்டாளர்கள் தமது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளனர்.

(எ)

ஈழநாடு





# இந்தியாவில் தொற்று மரணம் இரண்டு இலட்சத்தை கடந்தது!

புதுடில்லி,ஏப்.29

இந்தியாவில் கொரோனா தொற்றால் நேற்று காலை வரையான 24 மணி நேரத்தில் மூவாயிரத்துக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்தனர். இதனால், அந் நாட்டில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 2 இலட்சத்தைக் கடந்துள்ளது.

இந்தியாவில் புதிய வகை கொரோனா அதிவேகமாகப் பரவி வருகின்றது. இந்நிலையில் நேற்று காலை 6 மணிவரையான 24 மணி நேரத்தில் 3,286 பேர் உயிரிழந்தனர் என்று இந்திய மத்திய சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதனால், இந்தியாவில் மொத்த கொரோனா உயிரிழப்புக்கள் 2 இலட்சத்து ஆயிரத்து 187 ஆக அதிகரித்துள்ளன.

இதேவேளை, இந்தக் காலப் பகுதியில் புதிதாக மேலும் 3 இலட்சத்து 62 ஆயிரத்து 850 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதனால், நாடு முழுவதும் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 1 கோடியே 79 இலட்சத்து 88 ஆயிரத்து 476 ஆக அதிகரித்துள்ளது.

ஒரு வாரத்திற்கு முன்பு ஏழு நாட்கள் சராசரி இறப்புக்கள் 1,490 பதிவாகியிருந்தது. இந்நிலையில் நாட்டில் சராசரி இறப்புகள் கடந்த வாரத்தில் 78% ஆக அதிகரித்துள்ளன. (ஐ)

# மும்பை மருத்துவமனையில் தீ: 4 நோயாளிகள் பரிதாப மரணம்!



மும்பை, ஏப். 29

மும்பை மருத்துவமனையில் நேற்று அதிகாலை ஏற்பட்ட தீ விபத்தில் நான்கு நோயாளிகள் கருகிப் பலியாகினர்.

இந்தத் தீ விபத்தை அடுத்து குறித்த மருத்துவமனையில் இருந்த 6 அதிதீவிர சிகிச்சை பிரிவு நோயாளிகள் உட்பட 20 நோயாளிகள் வேறு மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இந்தியாவில் தினசரி கொரோனா தொற்று நோயாளர் உச்சமாக அதிகரித்துள்ள நிலையில், கொரோனாவுக்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவமனைகளில் அடிக்கடி விபத்துகள் ஏற்பட்டு வருகின்றன.

மகாராஷ்டிரா மாநிலம் நாசிக் நகரில் உள்ள ஒரு மருத்துவமனையில் ஒக்சிஜன் விநியோகம் திடீரென நிறுத்தப்பட்டதால் அண்மையில் 24 பேர் பரிதாபமாக இறந் தனர்.

இதனை தொடர்ந்து சில நாட்களுக்கு முன்பு மகாராஷ்டிரா மாநிலம் பால்கர் அருகே வசாயில் உள்ள கொரோனா சிகிச்சை மையத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 13 நோயாளிகள் உடல் கருகி உயிரிழந்தனர். (ஐ)

# அசாமில் நிலநடுக்கம்!



புதுடில்லி, ஏப். 29

இந்தியாவின் அசாம் மாநிலத்தில் நேற்று காலை 7.51 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவுகோலில் 6.4 ஆகப் பதிவான இந்த நிலநடுக்கம் வட, கிழக்கு மாநிலங்களிலும், வடக்கு வங்காளத்திலும் உணரப்பட்டது.

நிலநடுக்கத்தின் மையப் புள்ளியானது அசாம் மாநிலத்தின் தேஜ்பூரிலிருந்து 43 கி.மீ. தொலைவில் இருந்ததாக கணிக்கப்பட்டுள்ளது. பூமிக்கு அடியில் 17 கி.மீ. தொலைவில் நிலநடுக்கம் உருவானதாகவும் இந்திய தேசிய நிலநடுக்க மையம் கண்டறிந்துள்ளது.

இந்த நிலநடுக்கத்தில் இதுவரை யாரும் பாதிக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகவில்லை. எனினும், பல கட்டிடங்கள் பலத்த சேதம் அடைந்துள்ளன. சில இடங்களில் நிலத்தில் பாரிய பிளவு ஏற்பட்டுள்ளது. (ஐ)

# வாய்வழி உள்ளெடுக்கும் கொரோனா தடுப்பு மருந்து விரைவில் அறிமுகம்!

## பைசர் நிறுவனம் அறிவிப்பு




நியூயோர்க், ஏப். 29

வாய்வழியாக உட்கொள்ளும் வகையிலான கொரோனா தடுப்பு மருந்துகளை பைஸர் நிறுவனம் விரைவில் அறிமுகம் செய்யவுள்ளது.

இதுகுறித்து பைஸர் நிறுவனத்தின் இயக்குநர் அல்பேர்ட் போர்லா கூறும்போது,

“நாங்கள் கொரோனாவுக்கு எதிராக இரண்டு வகையான தடுப்பு மருந்துகளை கண்டறியும் முயற்சியில் இறங்கினோம். ஒன்று தடுப்பூசி, மற்றொன்று வாய்வழியாக உட்கொள்ளும் மருந்து. வாய்வழியாக உட்கொள்ளும் மருந்தில் நிறைய நன்மைகள் உள்ளன. அதில், நீங்கள் மருத்துவமனைக்கு செல்ல வேண்டிய தேவையில்லை. வீட்டிலிருந்தே மருந்து எடுத்துக் கொள்ளலாம். எல்லாம் நல்லபடியாக சென்றால் இந்த ஆண்டின் இறுதியில் வாய்வழியாக உட்கொள்ளும் கொரோனா தடுப்பு மருந்துகளை எதிர்பார்க்கலாம்” என்றார்.

உலகெங்கிலும் ஊசி வகையிலான தடுப்பு மருந்துகளே தற்போது பயன்பாட்டில் உள்ளன. பைஸர் நிறுவனம் வாய்வழியாக உட்கொள்ளும் மருந்தை அறிமுகப்படுத்தினால், ஏராளமான மக்களை கொரோனா தடுப்பு மருந்து சென்றடைவதற்கு ஏதுவாக இருக்கும் என்று மருத்துவ வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)

# அவசர உயிர் பாதுகாப்பு கருவிகள் இந்தியாவுக்கு பிரான்ஸ் அன்பளிப்பு



பாரிஸ், ஏப். 29

கொரோனா வைரஸ் தொற்று நோயால் மிக மோசமான பாதிப்புக்களை சந்தித்துவரும் இந்தியாவுக்கு தேவையான அவசர உயிர்காப்பு மருத்துவ உபகரணங்களை பிரான்ஸ் அனுப்பவுள்ளது.

ஒட்சிசன் செறிவு கருவிகள், திரவ ஒட்சிசன் கொள்கலன்கள், செயற்கை சுவாசக் கருவிகள் ஆகியவற்றை பிரான்ஸ் அனுப்புகிறது.

“கொரோனா தொற்று நெருக்கடியில் சிக்கியுள்ள இந்திய மக்களுக்கு ஆதரவாக பிரான்ஸ் இருக்கும்”, என ஜனாதிபதி இமானுவேல் மக்ரோன் கடந்த வெள்ளிக்கிழமை தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், இந்தியாவுக்கு 8 ஒட்சிசன் செறிவு கருவிகள், திரவ ஒட்சிசன் கொள்கலன்கள், செயற்கை சுவாசக் கருவிகள் உள்ளிட்ட மருத்துவ உதவிகள் வழங்கப்படும் என்று பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு ஒட்சிசன் செறிவாக்கல் கருவி மூலம் 250 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைக்கு தடையில்லாமல் ஒட்சிசன் வழங்கலாம் அல்லது அதிகம் பாதிக்கப்பட்ட 15 அதி தீவிர சிகிச்சை பிரிவு நோயாளிகளுக்கு ஒட்சிசன் வழங்க முடியும். இவை இந்த வாரம் விமானம் மூலம் இந்தியாவுக்கு அனுப்பப்படவுள்ளன. (ஐ)

# நாடு சிதைவதைத் தடுக்காவிடில் பிரான்ஸில் சிவில் யுத்தம் மூளும்!



பாரிஸ், ஏப். 29

ஜனாதிபதி மக்ரோனின் ஆட்சி பிரான்ஸை “இஸ்லாமியர்களின் கைகளில்” சிக்கி சிதைய விட்டால் அதைத் தடுப்பதற்காக நாட்டில் இராணுவ ஆட்சி அமுல் செய்யப்பட வேண்டும் என்று முன்னாள் இராணுவ ஜெனரல்கள் இருபது பேர் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக இருபது ஜெனரல்கள், 80 முன்னாள் படை அதிகாரிகள் உட்பட சுமார் ஆயிரம் பேர் கையொப்பமிட்டுள்ள பகிரங்கக் கடிதம் ஒன்று பிரபல வலது சார்பு “வலெயுரஸ் அக்ருல்லெர்ஸ்” என்ற சஞ்சிகையில் வெளியாகியிருக்கிறது.

சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்பு அல்ஜீரியாவுக்கு சுதந்திரம் வழங்க பிரான்ஸ் முடிவு செய்த சமயத்தில் அதனை எதிர்த்த படைத் தளபதிகளால் முன்னெடுக்கப்பட்டுத் தோல்வியில் முடிந்த அரச கவிழ்ப்பு சதிப் புரட்சியின் நினைவு நாளிலேயே அந்த சர்ச்சைக்குரிய கடிதம் வெளியாகி இருக்கிறது.

பிரான்ஸில் அதிகரிக்கும் இஸ்லாமிய வாதமும் நகரங்களை சூழ வளர்ந்து வருகின்ற வெளிநாட்டு குடியேறிகளின் குடியிருப்புக்களையும் சுட்டிக் காட்டியிருக்கின்ற அந்தக் கடிதம் ”ஆயிரக்கணக்கானோரின் மரணங்களுக்கு அவை வழிவகுக்கும்” என்று எச்சரிக்கை செய்கிறது.

“பிரான்ஸில் ஒரு சிவில் யுத்தம் வெடிப்பதைத் தடுக்க வேண்டுமானால் இராணுவப் புரட்சி அவசியம்” என்று மக்ரோனுக்கு எழுதப்பட்ட அந்தக் கடிதம் வலியுறுத்தி உள்ளது.

நாட்டின் தேர்தலுக்கு இன்னமும் ஓராண்டு காலம் உள்ள நிலையில் நாட்டின் பாதுகாப்புத் தொடர்பாக வெளிவந் திருக்கின்ற இந்தக் கடித விவகாரம் அரசியல் அரங்கில் பெரும் சலசலப்புகளை உருவாக்கியிருக்கிறது.

முன்னாள் படைத் தளபதிகளின் சர்ச்சைக்குரிய அந்தக் கடிதத்துக்கு அரசு கடுமையான கண்டனத்தை வெளியிட்டிருக்கிறது. “இது ஓர் ஏற்றுக்கொள்ள முடியாத செயல்”, பல்லாயிரக்கணக்கான படைவீரர்களது முகத்தில் கரிபூசும் நடவடிக்கை” என்று தெரிவித்திருக்கிறார் பிரான்ஸின் பாதுகாப்பு அமைச்சர் புளோரான்ஸ் பார்லி. (ஐ)

## இணைந்த வட,கிழக்கு மாகாண சபைக்கு

# தேர்தல் நடத்தப்படுமானால் முதலமைச்சர் வேட்பாளராவேன்

## சாணக்கியன் எம்.பி.



மட்டக்களப்பு, ஏப்.29

**"இணைந்த வடக்கு, கிழக்கு மாகாண சபைக்கு தேர்தல் நடைபெறுமானால் அதில் முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிடுவேன்", என்று மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.**

மட்டக்களப்பு நகரிலுள்ள மட்டு. ஊடக அமையத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில்,

"நாங்கள் நல்லாட்சி அரசாங்கத்திற்கு முட்டுக்கொடுத்துள்ளோம் என்றும், கிழக்கிலே தமிழர், முஸ்லிம்கள் ஒற்றுமைப்படக்கூடாது என்பதற்காகவும், கிழக்கில் தமிழர்களின் இருப்பு பறிமுதல் செய்யப்படுவதற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்புத்தான் காரணம் எனப் பேசியவர்கள், இன்று கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தரம் குறைக்கப்பட்டதற்கு அப்பிரச்னை சம்பந்தமாக பேசாமல் இருப்பது கவலையளிக்கின்றது. இவ்வாறான அரசியல்வாதிகளை கல்முனை மக்களும்,அம்பாறை மாவட்ட மக்களும் இனியும் நம்பி ஏமாறக்கூடாது.

ஆனால், இன்று நாட்டிலே பல்வேறு பிரச்னைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பிரச்னைகள் உட்பட பல பிரச்னைகளில் தமிழர்களும், முஸ்லிம்களும் ஒற்றுமையாகவும், சமாதானமாகவும் செயல்படுகின்றார்கள்.

கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் ஒற்றுமையாக செயல்படுவதை அவதானித்த ஒரு சில தமிழ் அரசியல்வாதிகளும், முஸ்லிம் அரசியல்வாதிகளும் இணைந்து தங்களின் குறுகியகால அரசியலுக்காகவும், தங்களின் அரசியல் வியாபாரத்திற்காகவும், அரசியல் இருப்பு வீழ்ச்சி காணும் என்பதற்காவும் எடுத்த நடவடிக்கைதான் கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகம் தரம்குறைத்து அனுப்பப்பட்ட கடிதமாகும். இவ்விடயமாக அமைச்சர் நாமல் ராஜபக்ஷவிடம் நான் தொலைபேசியில் தொடர்புகொண்டு கதைத்துள்ளேன்.

மாகாண சபை தேர்தல் நடப்பதற்கான எந்த அறிவிப்பும் இதுவரையில் வெளியிடப்படவில்லை. அதேபோன்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் முதலமைச்சர் வேட்பாளர் தொடர்பில் எந்தவிதமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை. வட, கிழக்கு இணைக்கப்பட்டு மாகாண சபை தேர்தல் நடைபெறுமானால் அதில் நான் போட்டியிடுவேன் - என்றார்.



# நயினாதீவில் வெசாக்: நேற்று கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப். 29

தேசிய வெசாக் பண்டிகையை கொண்டாடுவது தொடர்பாக விசேட கலந்துரையாடல் நேற்று காலை நயினாதீவு ராஜமகா விகாரையில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் வடமாகாண ஆளுநர் திருமதி பீ.எஸ்.எம். சார்ள்ஸ், ரஜமகா விகாரையின் விகாராதிபதி வண. நவதகலபதுமகீர்த்தி தேரர் ஆகியோர் வெசாக் பண்டிகை நடத்துவது தொடர்பான முன்னேற்பாடுகள், ஒழுங்கமைப்புகள் தொடர்பாக கலந்துரையாடினர்.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், ஆளுநரின் இணைப்பு செயலாளர், மக்கள் தொடர்பு அதிகாரி மற்றும் வேலனை பிரதேச செயலாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கடந்த சில வாரங்களாக தேசிய மற்றும் மாகாண ரீதியில் நடைபெற்ற தேசிய வெசாக் பண்டிகைக்கான கலந்துரையாடல்களில் எட்டப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் முன்னேற்பாட்டு வேலைகள் குறிப்பிட்ட அதிகாரிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட்ட வேலைகளின்கள நிலவரத்தை ஆய்வு செய்த ஆளுநர் தலைமை விகாராதிபதியை சந்தித்து மேலதிக ஏற்பாடுகள் தொடர்பிலும் கலந்தாலோசித்தார். (ஐ)

# கிளிநொச்சியில் கண்காணிப்பு!

கிளிநொச்சி, ஏப். 29

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா அச்ச நிலை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் இணைந்து சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

வீதிகளில் பயணிப்பவர்கள் பொது இடங்களில் கூடுபவர்கள் முகக்கவசம் அணிய வேண்டும் என்பதை வலியுறுத்தி மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர். தருமபுரம் பொலிஸ்பிரிவின் பல்வேறு பகுதிகளில் நேற்று முன்தினம் விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (ஐ)



# மரண அறிவித்தல்கள்

மலர்வு 17 - 10 - 1938



உதிர்வு 27 - 04 - 2021

## திருமதி இராசையா பரமேஸ்வரி

நுணாவில் – இலுப்பைக்கடவை

யாழ். சாவகச்சேரி நுணாவிலைப் பிறப்பிடமாகவும், மன்னார் கட்டாடுவயல் இலுப்பைக்கடவையை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா பரமேஸ்வரி அவர்கள் 27.04.2021 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதம் அடைந்தார். அன்னார், காலஞ்சென்ற சின்னத்தம்பி, அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், இராசையா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற லோகநாதன், ஜெயபவானி(சுவிஸ்), ஜெயரஞ்சனி(சுவிஸ்), ஜெகநாதன்(லண்டன்), ஜெயமணி(சுவிஸ்), யோகேந்திரன்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற சண்முகலிங்கம், மார்க்கண்டு ஆகியோரின் சகோதரியும், விஸ்வலிங்கம் மகேஸ்வரி அவர்களின் சகோதரியும், சிவகுருநாதன்(சுவிஸ்), கமலேந்திரன்(சுவிஸ்), ஆனந்தி(லண்டன்), பாலேந்திரன்(சுவிஸ்), விஜிதா(லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சுஜன், நரேஷ், கானிலா, அனித்தா, தினோஷன், நிதுஷா, சாருஜன், பானுஜா, அன்விதா, அவனீஷ், குகனேந்திரா, அகீபன், இசபெல், நிரோஜன் ஆகியோரின் பாசமிகு பேத்தியும், மஹா, நீறா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.04.2021) வியாழக்கிழமை அன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப 03:00 மணியளவில் கட்டாடுவயல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
ஜெயபவானி - (மகள்) +41776111064
ஜெயரஞ்சனி - (மகள்) +41787974259
ஜெகநாதன் - (மகன்) +447745817572
ஜெயமணி - (மகள்) +41788188958
யோகேந்திரன் - (மகன்) +447542221849

தகவல்:
குடும்பத்தினர்

மலர்வு 22 - 12 - 1952



உதிர்வு 26 - 04 - 2021

## திருமதி சிறிஸ்கந்தராசா பதிவிரதாசிரோன்மணி

உடுத்துறை வேம்படி – யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு வேம்படி உடுத்துறையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சிறிஸ்கந்தராசா பதிவிரதாசிரோன்மணி அவர்கள் கடந்த 26.04.2021 திங்கட்கிழமை காலமானார்

அன்னார், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ள இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பிராசா தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், தம்பிராசா சிறிஸ்கந்தராசா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஸ்ரீறஞ்சினி (சுமதி), மற்றும் ஸ்ரீகரன் (பிரான்ஸ்), ஸ்ரீதரன் (சஞ்சய் – டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தாயாரும்,

புவனேஸ்வரி, கிரித்திகா ஆகியோரின் அன்பு மாமியாரும், கிரிசன், ஆராதனா, ஆதிரா ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.04.2021) வியாழக்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உடுத்துறை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
சிறிஸ்கந்தாசா (கணவர்) - 0766462458
ஸ்ரீகரன் (மகன்) - 0764068699, 0033758558492
ஸ்ரீதரன் (சஞ்சய் - மகன்) 004524432789, 004528785578

தகவல்:
குடும்பத்தினர்

ஈழநாடு



### மேலும் 145 பேர் கைது

# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறினால் 10,000 ரூபாய் அபராதம், 6 மாதம் சிறை

கொழும்பு,ஏப்.29

**தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறுபவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்திய பின்னர் அவர்கள் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டால் 10,000 ரூபா அபராதம் மற்றும் 6 மாதச் சிறைத்தண்டனை விதிக்கப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.**

அத்துடன் நேற்றுக்காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணித்தியாலங்களில் மாத்திரம் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 145 பேர் கைது செய்யப்பட்டனர் எனவும் அவர் தெரிவித்தார்.

அவர்களுள் அதிகமானவர்கள் மொனராகலை, திருகோணமலை மற்றும் களுத்துறை மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனடிப்படையில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 3,900 பேர் இதுவரையில் கைது



செய்யப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

2020 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் மாதம் 30 ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் இந்த நபர்கள் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (எ)

# மொழித் தேர்ச்சி பரீட்சைகளும் ஒத்திவைப்பு

கொழும்பு,ஏப்.29

அரச கரும மொழிகள் திணைக்களத்தால் முன்னெடுக்கப்படவிருந்த அனைத்து மொழித் தேர்ச்சி பரீட்சைகளையும் ஒத்திவைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்தத் திணைக்களத்தின் ஊடாக முன்னெடுக்கப்படும் ஏனைய பரீட்சைகளும் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பரீட்சைகள் இடம்பெறும் திகதி எதிர்வரும் காலங்களில் அறிவிக்கப்படும் என அரசாங்கத் தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

# இடியன் துவக்கு வெடித்து காயமடைந்தவர் கைது!

### முல்லைத்தீவில் சம்பவம்

முல்லைத்தீவு,ஏப்.29

முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குமுழமுனை கிராமத்தில் பன்றிக்கு வெடிவைப்பதற்காக இடியன் துப்பாக்கி பயன்படுத்த முற்பட்ட போது தவறுதலாக துப்பாக்கி வெடித்து காயமுற்ற நிலையில் நபரொருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

குமுழமுனை வனப்பகுதியில் பன்றிக்கு வெடிவைப்பதற்காக சட்டவிரோத இடியன் துப்பாக்கியை கொண்டு சென்று தயார்படுத்திய போது துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் இவர் காயமடைந்தார்.

இருப்பினும், இந்த நபர் இரகசியமாக மருந்து எடுத்துக் கொண்டு வீட்டிலிருந்த நிலையில் இதுதொடர்பில் பொலிஸாருக்குத் தெரியப் படுத்தப்பட்டதைத் தொடர்ந்து முல்லைத்தீவு பொலிஸாரால் இந்நபர் கைது செய்யப்பட்டார்.

இந்நபர் பயன்படுத்திய துப்பாக்கி மற்றும் அதற்குரிய குண்டு வகைகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளதோடு இந்நபரையும் கைது செய்து விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

இச்சம்பவத்தில் காயமடைந்த நிலையில் கைது செய்யப்பட்ட நபர் குமுழமுனை 6 ஆம் வட்டாரம் பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடையவர் எனத் தெரிய வருகிறது. இச்சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# ராஜிதவுக்கு எதிரான வழக்கு ஜூலையில் விசாரணைக்கு

### மேல் நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு,ஏப்.29

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன மற்றும் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் மொஹமட் ரூமி ஆகியோருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை ஜூலை மாதம் 7 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தமித் தொடவத்த முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் சர்ச்சைக்குரிய வெள்ளை வான் கடத்தல் சம்பந்தமாக ஊடகச் சந்திப்பு ஒன்றை நடத்தி, அதன் மூலம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீது பொய்க் குற்றச்சாட்டுக்களை சுமத்தியதாக குறித்த இருவருக்கும் எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (எ)

# மரண அறிவித்தல்



மலர்வு 06 - 10 - 1937

உதிர்வு 22 - 04 - 2021

## திருமதி. தங்கமலர் இராசையா

ஏழாலையை பிறப்பிடமாகவும், டென்மார்க்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி.தங்கமலர் இராசையா காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரித்தம்பி – இளையபிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற வல்லிபுரம் – சின்னப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற இராசையா அவர்களின் அன்பு மனைவியும், சந்திரமலர் (ஏழாலை), வசந்தமலர் (லண்டன்), இராசமலர் (கனடா), சிவானந்தி (ஜேர்மன்), ஆனந்தராஜா (கனடா), ஆகியோரின் அன்புத் தாயாரும், யோகராஜா, அருள்தாஸ், மனோரஞ்சன், சரவணபவன், தயாவதி ஆகியோரின் அன்பு மாமியும். செல்வரத்தினம், செல்வராசா, நடராசா, தங்கராசா யோகமலர், பூமலர், நேசராசா, மல்லிகாமலர் ஆகியோரின் அன்பு சகோதரியும். ஜோன்சன்–மனுஎலா, யோகதர்சன்–நிஷாந்தினி, (டென்மார்க்) சுபாஜினி–ரமேஷ் (கனடா)டெனிசுயா–சிவகுமார், சாரா–வினோத் நிராஜ், டேவிட், ஸ்ரெப்பனி–பிரகலதன் (லண்டன்), டினேஷ்–பிரியா (கனடா) ரெபி, ஸ்ரெபான்,மதுஷன் (ஜேர்மனி) கனிஸ்ரா–சந்திரமோகன், கரண்யா–டிலக்ஸன் (கனடா) ஆகியோரின் பேத்தியும் ஜோசுவா, யஸ்டின், ஜெசொன், தனிஷ், திவிஷா, இஷான், இஷாரா, ஆரன், டனுயன், டெனுசா, டெனிசா, ஜே.ஜே,வேதாந், அஜய், கிருஷான், ரியா, டிலன் ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல், 01-05-21 சனிக்கிழமை 11.00-12.30வரை, Skovkapel, Nørremarkskirken, Havelodden 4,7100 Vejle, DK. இல் பார்வைக்கு வைக்கப்பட்டு, 02-05-21 ஞாயிற்றுக் கிழமை 10.00-12.00வரை , Vestre kirkegård og krematorium Silkeborgvej 40, 8700 Horsens.DK. இல் இறுதி அஞ்சலியும், தகனமும் இடம்பெறும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**தொடர்புகளுக்கு:** மகள் (சந்திரமலர்) + 94 778395386
பேரன் (ஜோன்சன்) +45-5222 8063.
பேரன் (தர்சன்) + 45-6072 9969.




# கொரோனா தடுப்பு கூட்டு ஒத்துழைப்பு பிராந்திய மாநாட்டில் இலங்கை இணைவு

கொழும்பு,ஏப்.29

கொரோனாவுக்கு பிரதிபலிப்பது தொடர்பில் சீனா, ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த வெளி நாட்டு அமைச்சர்களுடனான கூட்டு மாநாட்டில் வெளிநாட்டு அமைச்சர் தினேஷ் குணவர்த்தன பங்கேற்றார்.

கொரோனாவுக்கான பிரதிபலிப்பு சார்ந்த ஒத்துழைப்பைப் பலப்படுத்துதல் மற்றும் தொற்றுநோய்க்குப் பிந்தைய பொருளாதார மீட்சியை ஊக்குவித்தல் மற்றும் தொற்றுநோயின் அண்மைய அதிகரிப்புக்கு மத்தியிலான வறுமை ஒழிப்பு ஆகியன தொடர்பில் இந்தக்கலந்துரையாடலின் போது கவனம் செலுத்தப்பட்டது.

இந்த மாநாட்டில் அமைச்சர் தினேஷ் தெரிவிக்கையில்:

கொரோனாவுக்கு திறம்பட பிரதிபலிப்பதற்கான ஒத்துழைப்பின் முக்கியமான தேவையை அடிக்கோடிட்டுக் காட்டினார்.

பொருளாதார மீட்சி மற்றும் கிராமப்புற வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதில் தேசிய முன்னுரிமைகளை முன்னோக்கி எடுத்துச்செல்வதற்கு நாடுகளுக்கு உதவும் வகையில், கொரோனா தொற்றுநோயால் முன்வைக்கப்படும் சவால்களை எதிர்கொள்வதன் முக்கியத்துவத்தையும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

மேலும், ஐ.நா. மற்றும் உலக சுகாதார தாபனத்தின் வழிகாட்டுதலின் கீழ், தேவைகளையுடைய நாடுகளுக்கு முக்கியமான மருத்துவ உபகரணங்கள், மருந்துகள் மற்றும் தடுப்பூசிகள் நிலையாகவும், சமமான அளவிலும் கிடைப்பதனைப் பராமரிப்பதற்குத் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியம்- என்றார்.

இயற்கை மற்றும் ஏனைய பேரழிவுகளின் போது அவசரத் தேவைகளை வழங்குதல், தொழில்நுட்பம் மற்றும் ஏனைய கருவிகளின் பயன்பாடு, கிராமப்புறப் பொருளாதாரங்களில் வறுமை ஒழிப்புக்கான தளங்கள் போன்றன தொடர்பான சிக்கல்களைத் தீர்ப்பதற்கான ஒரு செயன்முறை மைய விடயமாக அமைதல் வேண்டும் என பங்கேற்பாளர்கள் தெரிவித்தனர். (எ)

ஈழநாடு
Eelanadu

# கெயிக்வாட், டூ பிளசிஸ் அதிரடி சென்னை சுப்பர் கிங்ஸ் வெற்றி!

டில்லி, ஏப். 29

கெயிக்வாட், டூ பிளசிஸின் அதிரடி இணைப்பாட்டம் கைகொடுக்க 7 விக்கெட்களால் ஹைதராபாத்தை வெற்றி கொண்டது சென்னை அணி.

ஐ.பி.எல். இருபது - 20 தொடரில் நேற்றிரவு டில்லியில் நடந்த போட்டியில் ஹைதராபாத் சன்ரைசர்ஸ், சென்னை சுப்பர் கிங்ஸ் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற ஹைதராபாத் அணியின் தலைவர் டேவிட் வோர்ணர் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

டேவிட் வோர்ணர் - ஜொன்னி பெயர்ஸ்ரோ இணை தொடக்கம் கொடுத்தது. பெயர்ஸ்ரோ 7 ஓட்டங்களுடன் கரனின் பந்தில் சாஹரிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த மனிஸ் பாண்டே வோர்ணருடன் இணைந்து அதிரடியாக ஆடினார். வோர்ணர் - பாண்டே சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. 3 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 57 ஓட்டங்களைப் பெற்று நிகிடியின் பந்தில் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த வில்லியம்ஸன் அதிரடி காட்ட, பாண்டே 5 பௌண்ட்ரிகள் ஒரு சிக்ஸருடன் 61 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

20 ஓவர்கள் நிறைவில் ஹைதராபாத் அணி 3 விக்கெட்கள் இழப்புக்கு 171 ஓட்டங்களை எடுத்தது.

வில்லியம்ஸன் 4 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 10 பந்துகளில் 26 ஓட்டங்களையும், கேதார் ஜாதவ் ஒரு பௌண்ட்ரி, ஒரு சிக்ஸருடன் 4 பந்துகளில் 12 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

சென்னையின் பந்துவீச்சில், நிகிடி 2 விக்கெட்களையும், சாம் கரன் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு கெயிக் வாட், டூ பிளசிஸ் இணை அதிரடி தொடக்கம் கொடுத்தது.

44 பந்துகளில் 12 பௌண்ட்ரிகளுடன் 75 ஓட்டங்களை குவித்த கெயிக் வாட் ரசீத்கானின் பந்தில் வீழ்ந்தார். மறுமுனையில் டூ பிளசிஸ் 6 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 56 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். அடுத்து வந்த மொயின் அலி 15 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

இறுதியில் சென்னை அணி 18.3 ஓவர்களில் 3 விக்கெட்கள் இழப்புக்கு 173 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

ஜடேஜா 7 ஓட்டங்களையும், சுரேஷ் ரெய்னா 17 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

ஹைதராபாத்தின் பந்துவீச்சில் ரசீத் கான் 3 விக்கெட்களையும் வீழ்த்தினார்.

போட்டியின் நாயகனாக கெயிக் வாட் தெரிவானார். (ஐ)




# பட்டேல் புதிய சாதனை

அஹமதாபாத், ஏப். 29

பெங்களூர் அணியைச் சேர்ந்த ஹர்ஷல் பட்டேல், இந்த வருட ஐ.பி.எல். போட்டியில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்தி அசத்தி வருகிறார்.

குஜராத்தைச் சேர்ந்த ஹர்ஷல் பட்டேல், 2011இல் ஹரியானா அணிக்காக முதல் தரப் போட்டியில் அறிமுகமானார். 2012 முதல் ஐ.பி.எல். ஆட்டங்களில் விளையாடி வருகிறார். பெங்களூர் அணிக்காக ஆறு வருடங்கள் விளையாடிய பிறகு 2018இல் டில்லி அணிக்கு மாறினார். மூன்று வருடங்களுக்குப் பிறகு பெங்களூர் அணி ஹர்ஷல் படேலை மீண்டும் தெரிவு செய்தது.

மும்பை அணிக்கு எதிரான முதல் ஆட்டத்திலேயே ஐந்து விக்கெட்களை எடுத்து அசத்திய 30 வயது ஹர்ஷல் பட்டேல், தொடர்ந்து சிறப்பாகப் பந்துவீசி அதிக விக்கெட்கள் எடுத்த வீரர்களின் பட்டியலில் முதலிடத்தில் உள்ளார். நேற்றுமுன்தினம் டில்லிக்கு எதிரான ஆட்டத்திலும் சிறப்பாகப் பந்துவீசி 37 ஓட்டங்கள் கொடுத்து 2 விக்கெட்களை வீழ்த்தினார்.

இதுவரை ஆறு போட்டிகளில் விளையாடி 17 விக்கெட்களை வீழ்த்தியுள்ளார். இதன்மூலம் ஐ.பி.எல். போட்டியில் தொடர்ச்சியாக ஆறு ஆட்டங்களில் 17 விக்கெட்களை எடுத்த முதல் வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

முன்னதாக இந்த சாதனையை லசித் மலிங்க வசமிருந்தது. அவர் 6 போட்டிகளில் 16 விக்கெட்களை கைப்பற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# இலங்கை - பங்களாதேஷ் இரண்டாவது டெஸ்ட் இன்று

கண்டி, ஏப். 29

இலங்கை - பங்களாதேஷ் அணிகள் மோதும் இரண்டாவது டெஸ்ட் போட்டி இன்று கண்டி பல்லேகல மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

இலங்கை வந்துள்ள பங்களாதேஷ் அணி இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது. முதலாவது டெஸ்ட் போட்டி கடந்த 21 தொடக்கம் 25ஆம் திகதி வரை நடந்தது. இந்தப் போட்டி வெற்றி - தோல்வியின்றி முடிவடைந்தது.

கண்டி பல்லேகலவில் நடந்த இந்தப் போட்டியில் முதல் இனிங்ஸில் பங்களாதேஷ் அணி 7 விக்கெட் இழப்புக்கு 541 ஓட்டங்களை எடுத்தது. பதிலுக்கு முதல் இனிங்ஸில் ஆடிய இலங்கை அணி, 8 விக்கெட் இழப்புக்கு 648 ஓட்டங்களை குவித்தது. இரண்டாவது இனிங்ஸில் 2 விக்கெட்கள் இழப்புக்கு 100 ஓட்டங்களும் எடுத்த நிலையில் போட்டி முடிவடைந்தது. இன்று ஆரம்பமாகும் போட்டியில் மைதா னம் சுழல் பந்துவீச்சுக்கு சாதகமாக இருக்கும் என்று கருதப்படுகின்றது.

இலங்கை அணி (உத்தேசம்): திமுத் கருணாரத்ன, லஹிரு திரிமன்னே, ஒஸத பெர்னாண்டோ, ஏஞ்சாலோ மத்தியூஸ், தனஞ்சய டி சில்வா, பதும் நிஷாங்க, நிரோசன் டிக்வெல்ல, ரமேஷ் மென்டிஸ் அல்லது லக்சன் சந்தகன், வனிந்து ஹசரங்க, சுரங்க லக்மால், விஸ்வ பெர்னாண்டோ.

பங்களாதேஷ் அணி (உத்தேசம்): தமீம் இக்பால், செயீப் ஹசன், நஜ்முல் ஹூசைன் சாண்டோ, மொமியுல் ஹகியூ, முஸ்பிஹூர் ரகீம், லிதொன் டாஸ், மெஹிடி ஹசன் மிராஷ், தைஜூல் இஸ்லாம், தஸ்கின் அஹமட், அபு ஜெய்ட், எபதாத் ஹூசைன்.



# மரண அறிவித்தல்

மலர்வு 12 - 10 - 1962



உதிர்வு 16 - 04 - 2021

## அருமைராஜா குணராஜா

யாழ். சங்கானையைப் பிறப்பிடமாகவும், பண்டத்தரிப்பை வதிவிடமாகவும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட அருமைராஜா குணராஜா அவர்கள் 16-04-2021 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார், அருமைராஜா சரஸ்வதி (சுபத்திரை) தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான முருகேசு அரியமலர் தம்பகளின் அன்பு மருமகனும், மலர்ஜோதி அவர்களின் பாசமிகு கணவரும், சிரஞ்சீவ், சுரேனா, சஜீனா, சஞ்சீவ் ஆகியோரின் அன்புத் தந்தையும், மரின், யசீகரன் ஆகியோரின் அன்புமிகு மாமனாரும், ஜெய்பாரதி அவர்களின் பாசமிகு பேரனும், கலாஜோதி(பிரான்ஸ்), ஜோதி மனோகர்(லண்டன்), ஜோதிக்குமார், ஜோதிஸ்வரன்(இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
சிரஞ்சீவ் (மகன்)
+ 33664647856

தகவல்:
குடும்பத்தினர்.
+ 33651609044

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 29.04.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.


# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருமதி கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ் அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க - நேரலை

**பகல்**
1.00 மணி : நலம்தானா - மறுஒளிபரப்பு
1.30 மணி : சுப்பர் சீன்ஸ் திரைப்படத்திலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார் - சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : வெள்ளித்திரை




**இரவு**
7.00 மணி : சமையல் சமையல்
7.30 மணி : பல்துறைக் கருவூலம்
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : மாதம் ஒரு இசைக்குழு - இசை நிகழ்ச்சி




10.00 மணி : யாவரும் கேளீர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் சந்தானம் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி - தரம் 06 தமிழ்
6.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
6.45 மணி - தரம் 08 கணிதம்
7.30 மணி - தரம் 09 வரலாறு
8.15 மணி - தரம் 10 விஞ்ஞானம்
9.00 மணி - க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) தமிழ்
10.00 மணி - பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி - க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப்பிரிவு) கணிதம்
12.00 மணி - தரம் 06 தமிழ்

**பகல்**
1.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
2.00 மணி - தரம் 08 கணிதம்
3.00 மணி - க.பொ.த சாதாரண தரம் விவசாயம்
3.40 மணி - க.பொ.த சாதாரண தரம் கத்தோலிக்கம்
4.20 மணி - க.பொ.த சாதாரண தரம் ஆங்கிலம்
5.00 மணி - க.பொ.த சாதாரண தரம் கணிதம்
5.40 மணி - க.பொ.த சாதாரண தரம் தகவல் தொழில்நுட்பம்
6.20 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள்
7.00 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் சீரணி ஸ்ரீ நாகபூசணி அம்பாள் தேவஸ்தானம்
10.00 மணி : பக்தி பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : யாழ்ப்பாணம் களபூமி திக்கரை முருகமூர்த்தி கோவில்
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
9.00 மணி : யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் சீரணி ஸ்ரீ நாகபூசணி அம்பாள் தேவஸ்தானம்

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி - ஆலயப் பாடல்கள்
8.00 மணி - ஜெபமாலை
9.00 மணி - மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி - திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி - குழந்தை யேசு மன்றாட்டு
11.30 மணி - ஜெபமாலை

**பகல்**
12.00 மணி - திருகோணமலைத்திருப்பலி
1.00 மணி - மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி - நற்சிந்தனை
3.00 மணி - பாடல்
4.30 மணி - திருகோணமலை திருப்பலி

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
12.00 மணி : லுகர் அதான்

**பகல்**
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
7.00 மணி : பிறை பிரசங்கம்

**இரவு**
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு
8.30 மணி : மனதோடு பேசலாம்